
# திருக்கோயில்



நவம்பர்
1998

விலை
ரூபாய் ஐந்து







சேலம் நேரு கலையரங்கில் 25.10.98 அன்று இலவசத் திருமண விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் இருந்து நேரு கலையரங்கிற்கு மண மக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். மணமக்களுக்குரிய சீர்வரிசைப் பொருட்களும் திருக்கோயில் யானை முன் வர மேள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட காட்சியை இங்கு கண்டு மகிழலாம்.

# திருக்கோயில்



திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 | வெகுதானிய ஆண்டு கார்த்திகை நவம்பர் 1998 | மணி 11 |
|---|---|---|---|



### சிறப்பாசிரியர்

சுகவனேஸ்வர், இ.ஆ.ப.,
ஆணையாளர்

### ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.,

### திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

திரு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம

திரு மு. இராமச்சந்திரன், பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


### முகப்பு

திருவண்ணாமலை அருள்மிகு
அருணாசலேசுவரர், அருள்மிகு
உண்ணாமுலை அம்மை

## பொருளடக்கம்


இலவசத் திருமணத் திட்டத்தில் அறநிலையத் துறையின் சாதனை
- மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்
- திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.

அருள்மிகு திருமால் 108 போற்றி

திருக்கார்த்திகைப் பெருமை
- என். லலிதா, எம்.ஏ.பிஎட்

சைவமும் பெரிய புராணமும்
- முனைவர் இரா. செல்வகணபதி

திருவண்டப்பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்
- மு.பெ. சத்தியவேல் முருகன், பி.இ.

சிவபெருமானுக்கு உகந்த வில்வம்
திருமாலுக்கு உகந்த துளசி
- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

திருமுறைகளில் பயின்றுள்ள திருத்தலங்கள்,
கந்தர் அலங்காரத்தில் சமுதாய இயல்
- முனைவர் மா. வண்ணமுத்து

கம்பனும் திருமுறைகளும் - திருக்கோவையார்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

வாசகர் எண்ணங்கள்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

# இலவசத் திருமணத் திட்டத்தில் அறநிலையத் துறையின் சாதனை

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள்.**

சேலம் மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை சார்பில், 60 இணைகளுக்கு இலவசத் திருமணம் நடந்தது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் திருமணங் களை நடத்தி வைத்துப் பேசியதாவது:-

### 1,000 இணைகளுக்கு இலவசத் திருமணம்

தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் 1000-க் கும் மேற்பட்ட இணைகளுக்கு இந்து சமய அற நிலையத்துறையின் சார்பில் இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு உள்ளது. சேலம் மாவட்டத்தில் மட்டும் இன்று நடந்த திருமணங்களையும் சேர்த்து 150-க்கும் மேற்பட்ட இணைகளுக்குத் திருமணம் நடந்துள்ளது.

இந்த இலவசத் திருமணத்திற்கு இணை களுக்கு ரூ. 3 ஆயிரம் வரை செலவழிக்கப்படுகிறது. இந்தத் தொகை போதாது என்று தெரிவித்தார்கள். முந்தைய ஆட்சியில் இலவசத் திருமணத்திற்கு ஒரு இணைக்கு ரூ. 1500 மட்டுமே செலவு செய்யப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் அத்தொகை ரூ. 3 ஆயிரமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

### நிலங்கள் மீட்பு

கோயில் திருப்பணிகளுக்காகவும், தினசரி பூஜைகள் செய்வதற்காகவும் வழங்கப்பட்ட நிலங் களில் இருந்து வரும் வருமானத்தை சரியான நோக்கத் திற்காகச் செலவழிக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் கோவில் நிலங்களை மீட்டு வருகிறோம். திருவாரூர் கோவிலுக்குச் சொந்த மான 896 ஏக்கர் நஞ்சை நிலத்தில் இருந்து குத்தகையாக 2098 குவிண்டால் நெல் வரவேண்டும். ஆனால் அந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் கடந்த 10 ஆண்டு களாக ஒருபடி நெல் கூட தரவில்லை.

பரமத்தி வேலூர் அருகே இந்து சமய அற நிலையத்துறைக்கு சொந்தமான நிலம் 10.35 ஏக்கர் இருந்தது. அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்தவர்கள் ஆண்டுக்கு ரூ. 484 கொடுத்து வந்தனர். அந்த நிலத்தை அரசு துறைக்கு மீட்டுக் கொடுத்ததன் மூலம் ரூ. 6 லட்சம் கிடைத்தது. ஆண்டுக்கு இப்போது ரூ. 80 ஆயிரம் வட்டி கிடைக்கிறது.

இப்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள கோவில் நிலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் இந்து சமய அறநிலையத் துறைக்கு வருமானம் அதிகரித்து வருகிறது. கோவில் திருப்பணிகள் செய்யப் படுகின்றன.

### தமிழில் அர்ச்சனை

காமராஜர் ஆட்சி காலத்தில் 1956-ம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டது.

கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் அதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

கோவில்களில் தமிழில் அர்ச்சனை வேண்டாம் என்றால் அவர்கள் தமிழராக இருக்க முடியாது.

இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பேசினார்கள்.

★★★

# கற்பனைக் களஞ்சியம்
# சிவப்பிரகாச சுவாமிகள்

திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.

சிவப்பிரகாச சுவாமிகள் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் **கல்வியில் கரையிலாத** நகரம் என்று பாராட்டப் பெறும் **காஞ்சிபுரத்திலே** தோன்றியவர்.

இவர் 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்ததாகச் சிலர் கூறுகின்றார்கள். இல்லை இவர் 51 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்; இவரது காலம் கி.பி. 1603 - 1654 என்று ஆய்வு செய்து இவரது காலத்தை நிர்ணயித்துக் கூறும் ஆய்வாளர்களும் உள்ளார்கள்.

இவர் வாழ்ந்த காலம் குறைவா அல்லது அதிகமா என்பது நாம் கவலைப்பட வேண்டாத ஒன்று. ஆனால் இவர் தம் வாழ்நாளில் ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டு என்பது யாவரும் போற்றிக் கொண்டாட வேண்டிய ஒன்று.

இவருடைய தமிழ்ப்பற்று, சமயப் பற்று, இலக்கண இலக்கியப் புலமை, தமிழுக்கு இவர் படைத்துத் தந்துள்ள நூல்கள் - எல்லாம் இவருக்கு இணை இவரே என்று காட்டுகின்றன.

திருக்குறள் பால் இவர் கொண்டிருந்த அளவிலாத ஈடுபாடு காரணமாக இவரை **''வள்ளுவப் பிரகாசர்''** என்றே வையம் பாராட்டிப் போற்றுகின்றது.

திருக்குறளில் உள்ள குறள் ஒவ்வொன்றும் ஒன்றே முக்கால் அடியால் யாக்கப் பெற்றது என்பது நாம் அறிவோம்.

அதனை ஈரடிகள் என்று குறிப்பிட்டுள்ள சிவப்பிரகாசர், பெருமானின் திருவடிகளைப் போன்றவை திருக்குறளின் ஈரடிகள் என்று போற்றுவது அவருடைய திருக்குறள் நெஞ்சினைக் காட்டுவதாக உள்ளது.

**''என் அடிகள்
வெண் குறள் நேர் அடி இரண்டு''**

என்பது சிவபெருமானின் ஈரடிகளாகத் திருக்குறளின் ஈரடிகளைப் போற்றும் இணையிலா வாசகமாகும்.

மூவர் தேவாரத்தில் மூழ்கித் திளைத்த சிவப்பிரகாச சுவாமிகள்

**''செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்''**

என்ற திருக்குறளை இணைத்து, மூவர் தேவாரத்தின் சிறப்பைப் போற்றியுள்ள ஒருகருத்தும் இங்கு நாம் எண்ணி மகிழத்தக்க ஒன்று.

இறைவன் செவிக்கு எது உணவு? என்று கேட்கிறார் சிவப்பிரகாசர்.

வேதம் உணவு என்று சிலர் சொல்கிறார்கள்.

இறைவன் வேத உணவை வெறுத்தவன், மூவர் தேவாரமே உணவாக விழைந்து ஏற்றவன் என்று திருக்குறள் 'உணவு' என்று சொன்ன அக்குறள் கருத்தையே இணைத்து

**''வேத உணவை வெறுத்துப் புகழ் மூவர்
ஓது தமிழ் உணவுக்கு உழலும் செவி
உடையான்''**

என்று சிவப்பிரகாசர், மூவர் தேவாரத்திற்கு ஏற்றம் தந்திருப்பதும் அதில் அருமையான ''செவிக்கு உணவில்லாத போழ்து'' என்ற திருக்குறளைச் சாறு பிழிந்திருப்பதும் மிக அருமையாக உள்ளது.

அதைப் போலவே திருவாசகத்திலும் தோய்ந்த அருட்புலமை மிக்கவரான சிவப்பிரகாச சுவாமிகள் அதன் சிறப்பை அற்புதமாக விவரித்திருக்கின்றார்.

**''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே''**

இவருடைய நால்வர் மணி மாலை சமய குரவர் நால்வர் அருமை பெருமைகளை அலசி ஆய்ந்து பக்திச் சுவை நனிசொட்ட சொட்ட அருளாளர்கள் பெருமை கூறும் அரிய நூல் என்பது ஆய்வாளர்கள் கருத்து.

இந்த நூலின் அருமை கருதி இதனைச் சிறிய ஓலைச் சுருளில் எழுதி அதனைச் சுற்றிக் கட்டி உருத்திராக்கக் கண்டிகையுடன் இணைத்துத் தலையில் அணிந்து கொண்டிருந்தார் மயிலம்சிவஞான பாலைய சுவாமிகள் என்பது வரலாறு.

தம் வாழ்நாளில் தமிழுக்கு அணிகலனாகத் திகழும் 34 நூல்களை இவர் படைத்தளித்தார் என்பது கொண்டு இவருடைய புலமைத்திறத்தை நன்கு உணரலாம்.

அந்நூல்களின் பட்டியல் அகர வரிசையில பின்வருமாறு:

1. இட்டலிங்க அபிடேக மாலை
2. ஏசுமத நிராகரணம்
3. குறுங்கழி நெடில்
4. கூவத் தலபுராணம்
5. கைத்தல மாலை
6. கொச்சகக் கலிப்பா
7 .சதமணி மாலை
8. சித்தாந்த சிகாமணி
9. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம்
10. சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு
11. சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளி எழுச்சி
12. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது
13. சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
14. சிவநாம மகிமை
15. சிவப் பிரகாச விகாசம்
16. சீகாளத்தி புராணம்
17. சோணசைல மாலை
18. தரும பரிபாடை
19. தல வெண்பா
20. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி
21. திரு வெங்கைக் கலம்பகம்
22. திருவெங்கை அலங்காரம்
23. திருவெங்கை உலா
24. திருவெங்கைக் கோவை
25. நன்னெறி
26. நால்வர் நான்மணி மாலை
27. நிரஞ்சன மாலை
28. நெடுங்கழி நெடில்
29. பழமலை அந்தாதி
30. பழமலை நாதர் பிச்சாடன நவமணிமாலை
31. பழமலை பெரிய நாயகி அம்மை நெடுங்கழி நெடில் ஆசிரிய விருத்தம்
32. பிரபுலிங்கலீலை
33. பெரிய நாயகி அம்மை கலித்துறை
34. வேதாந்த சூடாமணி

ஆகியனவாகும்.

ஆசுகவியாக, காளமேகமாக நினைத்த உடனே கவிதைகள் எழுதுவதில் சிவப்பிரகாசர் கருவிலே திருவாய்ந்த புண்ணியர்

இவர் மட்டுமல்ல; இவருடைய உடன்பிறந்தார் வேலையர், கருணைப்பிரகாசரும் கூட கவிஞர்கள்.

அதிலே கருணைப்பிரகாசர் சிவப்பிரகாசருடைய கவிபுனையும் ஆற்றலைப் பின்வரும் பாடல் ஒன்றில் வெகுவாகப் புகழ்ந்து கூறுகின்றார்:

''எவன் ஒரு நொடியில் எண்ணாது
இசைத்ததோர் செய்யுள் மற்றைக்
கவிகள் பன்னாள் நினைந்த
காப்பியங்கட்கு மேலாம்
எவன் இறை முதல் நாமத்தோடு
இயைதரு விளக்கப் பேரோன்
அவனொடு பிறப்பு எமக்கு ஈண்டு
அளித்த பால் வாழ்க மன்னோ''

கவிஞர்கள் பற்பல ஆண்டு முயன்று உருவாக்கக் கூடிய காவியங்களைவிட மேலானது, நினைத்த மாத்திரம் நொடியில் இவர் எழுதும் செய்யுள். சிவப்பிரகாசர் எனும் திருநாமம் பூண்ட இவரோடு பிறக்க என்னதவம் செய்தேனோ என்று வியப்புற்றுப் பாராட்டியுள்ளார் கருணைப்பிரகாசர்.

இலக்கிய வரலாற்றில் ஒருவர் அல்லது இருவர் இணைந்து நூல்களை இயற்றுவது உண்டு. ஆனால் அவர்கள் உடன்பிறந்தவராக இருந்ததில்லை.

ஆனால் உடன்பிறந்த மூவர் இணைந்து ஒரு நூல் எழுதி உள்ளார்கள் என்றால் அந்த நூல் தமிழில் தான் உண்டு.

திருக்காளத்தி தலபுராணம் தான் அந்த நூல். அந்த நூலினை மூவர் - உடன்பிறந்தார் எழுதி இருப்பது ஒரு அரிய செய்தி.

திருக்காளத்தி தலபுராணம் 9 சருக்கங்களைக் கொண்டது.

அவற்றுள் பாயிரம்

விட சங்கமச் சருக்கம்,
தென் கயிலாயச் சருக்கம்
பொன்முகலிச் சருக்கம்
நான்முகச் சருக்கம்
சீகாளத்திச் சருக்கம்

ஆகிய 5 சருக்கங்கள் கருணைப் பிரகாசர் எழுதியுள்ளார்.

கண்ணப்பச்சருக்கம்
நக்கீரர் சருக்கம்
} ஆகிய இரண்டினை சிவப்பிரகாசர் எழுதியுள்ளார்

கன்னியர்சருக்கம், சிலந்தி முற்கதைச்சருக்கம் - ஆகிய இறுதி இரு சருக்கங்களை வேலையர் எழுதி யுள்ளார்.

இவ்வாறு ஒரே குடும்பத்தில் உடன் பிறந்த மூவர் ஒரு சேர இணைந்து இயற்றியுள்ள தல புராணம் என்ற பெருமையைச் சீகாளத்திப் புராணம் பெற்று விளங்குகின்றது.

சோணசைலமாலை என்பது திருவண்ணா மலையைப் பற்றிய ஒரு அரிய நூல். மலை வளம் வருவதற்குள்ளாக 100 பாடல்கள் கொண்ட அந்நூலை எழுதி முடித்து விட்டார் நம் சிவப் பிரகாச சுவாமிகள்

அதைப் போலவே கடற்கரையில் உலாவச் சென்ற சிறிது நேரத்தில் அவர் கடல் மணலில் எழுதி வைத்த அரிய நீதி நூல்தான் நன்னெறி நூல். G.U. போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்பு இந்நூலுக்கு உண்டு.

இவருடைய கவிதைகளுக்கு உள்ள தனிச் சிறப்பு, இவர்தம் கற்பனைச் சிறப்பு ஆகும். இவரைக் கவிதை உலகமே போற்றிப் பாராட்டி வருகிறது என்றால் இவருடைய புலமை ஆற்றலை என்னென்பது?

பிரபுலிங்கலிலை என்ற கன்னட காவியத்தை மொழி பெயர்த்து தமிழில் உள்ள பெரிய புராணத்திற்கு ஈடாகப் படைத்துத் தந்த பெருமை இவருக்கு உண்டு.

இவருடைய கற்பனைகள் புதுமையானவை; அருமையானவை.

சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் ஊடல் வந்தால் அது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்கிறார் ஒரு பாடலில்.

சிவபெருமான் உமாதேவியின் ஊடலைத் தணிக்க உமாதேவியின் கால்களில் விழுவாராம். இறைவனே தம் பாதத்தில் விழும் அச்செயல் உமா தேவிக்கு மகிழ்ச்சியினைத் தராதாம்.

மாறாக சிவபெருமானின் தலையில் உள்ள கங்காதேவி தன் காலில் விழுந்து கிடக்கக் கண்டு பேரானந்தம் கொள்வார் உமாதேவி என்று இவர் செய்யும் கற்பனை வேடிக்கையானது; வேறு எவருக்கும் தோன்றாத கற்பனை. இதுபோல ஆயிர மாயிரம் கற்பனைகள் பிரபுலிங்க லீலையிலே இடம் பெற்றுள்ளன.

இதுபோன்ற கற்பனை நயம் தோன்ற இவர் பாடியுள்ள தனிப்பாடல்களும் உள்ளன.

கணபதியும், முருகனும் செய்யும் பிள்ளைக் குறும்புகள் எப்படி இருக்கும் என்று இவர் பாடி யிருப்பதும், அற்புதமான கற்பனையாகும்.

விநாயகர் சிவபெருமானிடம் வந்து **''அப்பா அப்பா! ஆறுமுகம் பாருங்கள் என் செவியைக் கிள்ளுகிறான்** என்று முறையிட,

வேலனை நோக்கிச் சிவபெருமான் வினவ

**''ஏன் அப்படி செய்தாய்?''**

**என்று**

**''அண்ணன் என் கண்களை எண்ணினான். நானும் காதைக் கிள்ளினேன்''** என்று முருகன் கூற,

சிவபெருமான் **''நீ ஏன் கண்களை எண்ணி னாய்? அது தவறுதானே!''** என்று கணபதியைக் கண்டிக்க,

**''தம்பி மட்டும் என் துதிக்கையை முழம் போட லாம்? நான் அவன் கண்களை எண்ணியது குற்றமா?''**

என்று முருகன் வினவுவதும், சிவபெருமான் உமாதேவியை அழைத்து **''வந்து பார்! உன் பிள்ளைகள் செய்யும் சேட்டைகளை''** என்று கூறுவதாக சிவப் பிரகாசர் கயிலாயக் காட்சிகளைக் கற்பனை செய்வது இவருக்கு நிகரானக் கற்பனைக் களஞ்சியம் உலகில் எவரும் இல்லை என்று கூற வைக்கிறது.

''இத்தகைய பிள்ளைகள் பெற்று இன்பமாக வாழ்க'' என்று மணமக்களை வாழ்த்துவதாக சிவப் பிரகாசர் பாடியிருப்பது மேலும் ஒர சிறப்பாக அமைந்து விளங்குகின்றது.

இன்னும் ஒரு கற்பனை. வேடிக்கையாகவும் புதுமையாகவும் உள்ளது.

உமாதேவி சிவபெருமானைப் பார்த்து **''உங்கள் தலையில் ஒரு பெண்ணைத் தானே வைத்திருக்கிறீர்கள்?''** என்று கேட்கிறாள்.

''அது பெண் இல்லை. தண்ணீர்'' என்று விடை சொல்கிறார் சிவபெருமான்.

**''தண்ணீருக்கு முகமும், கண்ணும், காதும், வாயும் கூட இருக்குமோ?''** என்று உமாதேவி கேட்கிறாராம்.

முகம் அல்ல அது, நீரில் மலர்ந்துள்ள தாம ரையை முகம் எனவும், குவளையைக் கண் என வும், வள்ளைப்பூவைக் காது எனவும், செவ்வாம் பலைச் செவ்வாய் எனவும் நீ தவறாகக் கருதிக் கொண்டு விட்டாய்''

என்று சிவ பெருமான் உமாதேவிக்கு சமா தானம் சொல்கிறார்.

''தண்ணீருக்குப் பெண்களுக்கு உள்ளதுபோல் மார்பகம் கூட இருக்குமா?'' என்று மீண்டும் வினவுகிறார் உமாதேவி.

''நீர்க்குமிழியை நீ மார்பு எனக் கருதிக் கொண்டு விட்டாய்?''

என்று மீண்டும் சமாதானம் கூறும் சிவ பெருமான்.

''என்ன சொன்னாலும் கேட்கமாட்டாயா நீ பெண்ணே!''

என்று உமாதேவியை நோக்கிக் கூற

''பெண்ணே'' என்ற தன்னைத் தான் சிவ பெருமான் அழைப்பதாக எண்ணிய கங்கை ''அழைத்தீர்களா சுவாமி'' என்று பேசிவிட,

சிவபெருமான் மறைக்க நினைத்தது வெளிப் பட்டு விட வேறு வழியின்றி உமாதேவியிடம் உண்மையைக் கூறி மன்னிப்பு கேட்டுக் கொண் டார் சிவபெருமான் என்றும் சிவப்பிரகாசர் பாடி யுள்ள கற்பனைத் திறம், நம்மை வியக்க வைக் கிறது. நகைக்க வைக்கிறது.

அந்தக் கற்பனை அமைந்த பாடலை இங்கு காண்போமா?

''ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யாரென்ன உமை வினவவும்
அன்னதொரு மடமங்கை யன்று; வெண் திரை
கொழித்து
அழகொழுகு தண்புனலெனத்
துய்யஒளி ஆனனங் கரியவிழி காதுவாய்
தோயத்தில் உண்டோ? எனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர்
கொடி வள்ளை
தூயசெங் குமுதம் என்னப்
பொய்என நினைத்து நல் கொங்கையுங்
கூந்தலும்
புனலின் இடை உண்டோ எனப்
புற்புதஞ் சைவலம் அது எனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காய் எனத்
தையலவள் என்ன என நாணொடு
வணங்கி என்
தன்பிழை பொறுத்திடு என்றே
சங்கரன் உரைத்திடத் திருவுளம் மகிழ்ந்த சிவ
சங்கரி உமைக் காக்கவே''

கற்பனையின் இமயம் என்றே சிவப்பிரகாசரைக் கூறலாம். எப்போதும் இறைவன் நினைவிலும் தியானத்திலும் இருந்தமையால் தான் அவருக்கு இத்தகைய கற்பனைகள் தோன்றின எனலாம்.

மயிலும் பாம்பும் ஒன்றினுக் கொன்று பகை யானவை.

மயிலே, முருகனுக்கு வாகனம். பாம்பு பரம னுக்கு ஆபரணம். மயில் வாகனத்தில் ஏறிச்சென்று சிவபெருமானை முருகன் கண்டு அளவளாவும் போது பாம்பின் நிலை என்னவாக இருக்கும் என்று கற்பனை செய்கிறார் சிவப்பிரகாசர்.

மயிலைக் கண்டதும் அஞ்சி பாம்பு, சிவபெரு மானின் கையிலுள்ள மண்டை ஓட்டினுள் தலையை விட்டு மறைத்துக் கொள்ளுமாம். மயில் போய்விட்டதா என்று மெல்ல தலையை நீட்டிப் பார்க்குமாம்.

மயில் இன்னும் இருக்கக்கண்டு மீண்டும் அவசர அவசரமாக மண்டை ஓட்டிற்குள் தலையை விட்டு மறைத்துக் கொள்ளுமாம் பாம்பு.

அத்தகைய மயில் வாகனம் உடைய முருகப் பெருமான் திருவடிகளைப் போற்றி வணங்கு வோம் என்று கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் பாடும் பாடல் பின்வருமாறு:

''பாகம் ஒருபெண் குடியிருக்கும்
பரமன் அணியிற் பரித்தமணி
நாகம் நுழைவுற்று உடல் சுருண்டு
கிடந்து நகுவெண் தலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப்
பார்த்து வாங்கப் போகும் ஒரு
தோகை மயில் வாகனப் பெருமான்
துணைத்தாள் கமலம்
தொழுதிடுவாம்''

இவர் தனியாக எழுதியுள்ள கூவம் தலபுராண மும், தம்பிமாருடன் இணைந்து எழுதியுள்ள திருக் காளத்தித் தல புராணமும், தலபுராணங்களில் தலை சிறந்து விளங்குகின்றன.

காளத்தித் தல புராணத்தில் இவர் பாடியுள்ள கண்ணப்பச் சருக்கத்திலும், நக்கீரர் சருக்கத்திலும் பல புதுமைகளைச் செய்துள்ளார் என்று ஆய் வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

வில் விசயன் அருச்சுனனே கண்ணப்பனாக வந்து தோன்றினான் என்பது சிவப்பிரகாசர் கருத்து.

முன் பிறவியில் அருச்சுனனாக இருந்தமை யால் இப்பிறவியில் வில்லைப் பிடித்த பொழுதே அக்கல்வி அனைத்தும் திண்ணனுக்கு விளங்கியது என்பது சிவப்பிரகாசர் வாக்கு.

கள்ளுண்ணல் வேடுவர்களுக்கு பழக்கம். இங்குக் கள்ளுண்ணுதலின் தீமையை நயம்பட உணர்த்துகின்றார் சிவப்பிரகாசர்.

கள்ளுண்ட வேடுவ மங்கை ஒருத்தி கள் ளுண்ட மயக்கத்தில் அயலொரு ஆடவனைத் தன் கணவன் என மயங்கித் தழுவிக் கொண்டாளாம்.

அவ்வேடுவனோ, அம்மங்கை தன்னைக் கட்டிப் பிடித்ததற்காக அவள் உண்ட கள்ளினுக்கு நன்றி கூறினானாம்.

நிறை காக்கும் மகளிரையும் நிலை தடுமாற வைப்பது கள் என்று பாடியுள்ளார் சிவப்பிரகாசர் கண்ணப்பர் சருக்கத்திலே.

நக்கீரர் சருக்கம் சிவப்பிரகாசரின் தமிழ்ப் பற்றைக் காட்டும் வகையில் அமைந்துள்ள அற்புதமான சருக்கம்.

இறைவனோடு வாது செய்து நக்கீரருக்குக் குட்ட நோய் உண்டாகி விடுகிறது. அது தீர இறைவன் அருளியபடி கயிலை காணப்புறப்படுகிறார். ''அமுதுறழ் தமிழ் புலவர் சிங்கம்'' ஆன நக்கீரர் மதுரையை விட்டு நீங்க மனமின்றி ''தமிழின் இனிமையைப் புலவர்களுடன் பகிர்ந்து கொள்வது இனி எப்போது?''

என்றெண்ணி மனம் கலங்குகிறாராம்.

தமக்குள்ள நோயை எண்ணிப் புலவர்களைத் தழுவிக் கொள்ளாது நக்கீரர் தயங்க, அவர்கள் நக்கீரரைக் கட்டி அணைத்து விடை கொடுத்தனர் என்று நட்பின் பெருமையை உணர்த்துகிறார் சிவப்பிரகாசர்.

கயிலை காணச் சென்ற வழியில் ஒருபூதம் நக்கீரரைப் பிடித்து மலைக் குகையில் அடைத்து விடுகிறது. திருமுருகாற்றுப் படை நக்கீரர் பாட முருகப் பெருமான் நக்கீரரை விடுவித்து அங்குள்ள பொய்கையில் மூழ்கக் கூறுகிறார்.

குளத்தில் மூழ்கிய நக்கீரர் பொன் முதலி ஆற்றில் எழுந்து ''கயிலை பாதி காளத்தி பாதி'' பாடுகிறார் என்று சிவப்பிரகாசர் புதிய நிகழ்ச்சி ஒன்றை உருவாக்கி விடுகிறார் நக்கீரர் சருக்கத்திலே

இந்த இடத்தில் பெரிய புராணத்தில் வரும் சுந்தரர் வரலாற்றை இணைத்துக் காட்டுவது சிவப்பிரகாசருக்குள்ள புலமை ஆற்றலாகும்.

சிவபெருமானாகிய தந்தை சுந்தரரை மணிமுத்தாற்றில் பொன் இடவைத்துத் திருவாரூர் குளத்தில் அதனை எடுக்கச் செய்தார்.

அந்த சிவபெருமானின் திருமகன் அல்லவா முருகப் பெருமான். அவர் நக்கீரரைக் குளத்தில் மூழ்கச் செய்து, பொன்முதலி ஆற்றில் எழச் செய்தார் என்று சுந்தரர் வரலாற்றினோடு இணைத்துக் காட்டிப் புதுமை செய்திருப்பதைக் காணுகின்றோம்.

பிரபுலிங்க லீலையில் கோரக்க சித்தருக்கு ஆணவம் கூடாதென அல்லமர் உணர்த்துவதை நயம்படக் காட்டியுள்ளார் நம் சிவப்பிரகாசர்.

கோரக்க சித்தருக்குத் தவத்தால் தம் உடம்பு வச்சிரம்போல் உறுதி ஆகிவிட்டதை எண்ணி ஆணவம் இருந்தது.

அந்த ஆணவம் அவரிடம் குடி கொண்டதைத் திருத்தி ஆட்கொள்ள நினைத்தார் இறைவர். அல்லம தேவராக தோன்றிய இறைவர் கோரக்கரிடம் வந்து ஆணவம் கூடாது என்று அறிவுறுத்தினார்.

ஆணவம் அகலப் பெறாத கோரக்கர் ஒரு வாளைக் கொண்டு தன் உடலை வெட்டிக் காட்டினார். வாளால் உடலில் ஊறு நேரவில்லை. 'கிண்கிண்' என்ற ஓசை மட்டுமே உண்டானது,'' பார்த்தீர்களா! என் உடல் வலிமையை?'' என்றார் கோரக்கர்.

அல்லமர் அதே வாளைக் கொண்டு தம் உடலை வெட்டுமாறு கோரக்கரைக் கேட்டுக் கொண்டார். கோரக்கரும் வெட்டினார்.

வாள் அல்லமரின் உடலை ஊடுருவி காற்றைக் கிழித்துச் செல்வது போல் சென்றது. ஒரு ஊறும் உண்டாக்கவில்லை.

அதைக் கண்டதும் கோரக்கரின் ஆணவம் அகன்றது. அல்லமரைத் தம் அருட்குருவாகக் கொண்டு உய்ந்தார்.

இந்த வரலாறு மூலம் ஆணவம் கூடாது என்று அறிவுறுத்துகின்றார் சிவப்பிரகாசர்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ | = | சிலந்தி |
| காளம் | = | பாம்பு |
| அத்தி | = | யானை |

இவை மூன்று பக்தி செய்த தலம் ஸ்ரீகாள அத்தி.

இவைகளைக் கண்டும் பக்தி வராவிட்டால் அவர்கள் மூடர்களே. என்பது சிவப்பிரகாசர் கூற்று

**''நறுமலர் கொய்து உன்**

**கழற்கிடார் பிறப்பின் நாய் பிறப்பு இனிது''**

என்றும் கூறுகிறார்.

வெறும் குடநீரில் அபிடேகம் செய்தால் ஆகாய கங்கை அவன் தருவான். வெறும் எருக்கம்பூ கட்டி வைத்தாலும்

கற்பகப்பூ ந்தோட்டமே தருவான்.

ஆகவே மாதர் மயல் விட்டு

**ஈசன் மயல் கொள்க**

**என்று உணர்த்துகிறார் சிவப்பிரகாசர்.**

சுந்தரர் 18 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்ததைக் கூறும் சிவப்பிரகாசர்

**''சுந்தருக்கு என்ன அழகு இல்லையா?''**
**அவர் கட்டழகு கொண்டவர்.**
**கல்வியங் கடல் கடந்தவர்**
**கலக்கம் தரக் கூடிய நோய் இல்லாதவர்**

அவர் நட்பிற்காக இறைவனே நடந்து சென்று தூது போகிறார். அத்தகைய அருளுக்கு உரியவரான சுந்தரர் 18 ஆண்டுகளில் தாமே வலிய திருக்கயிலை சென்றார் என்றால் மரணம் கண்டு அஞ்சலாமா? என்று வினவுகிறார் சிவப்பிரகாசர்.

கற்பார் நெஞ்சம் களிக்கும் புதிய கற்பனைகளையும் இவ்வாறு கருத்து வளம் மிருந்த கவிதைகளால் படைத்த புதுமை விரும்பி நம் சிவப்பிரகாசர்.

மேனாட்டுக் கவிஞர் வோர்ட்ஸ் வொர்த் பற்றிக் குறிப்பிடும்போது

***''அவர் புதிய பொருள்களைப் புதிய கோணத்தில் கண்டார்''*** என்று பாராட்டுவார்கள். அக்கருத்து கற்பனைக் கருவூலமான நம் சிவப்பிரகாசருக்கும் பொருந்துவதான கருத்தாகும்.

*வாழ்க சிவப்பிரகாசர் தம் விழுமிய புகழ்!*

# அருள்மிகு திருமால் 108 போற்றி

## அருள் வேண்டுதல்

### (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில் ..................... அவர்களுக்கும்
அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்,
சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,
பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்
பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்டவாழ்நாள்
பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல
வாழ்வெய்தவும்

உம் திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

## அருள்மிகு திருமால் எட்டுபோற்றிகள்

| | | |
|---|---|---|
| 1. | ஓம் அச்சுதனே | போற்றி |
| 2. | ஓம் இருடீகேசனே | போற்றி |
| 3. | ஓம் கோவிந்தனே | போற்றி |
| 4. | ஓம் தமிழோசையனே போற்றி | |
| 5. | ஓம் திருக்குறளனே | போற்றி |
| 6. | ஓம் நாரணனே | போற்றி |
| 7. | ஓம் மாதவனே | போற்றி |
| 8. | ஓம் வைத்தமாநிதியே | போற்றி போற்றி |

## அருள்மிகு திருமால் பதினாறு போற்றிகள்

| | | |
|---|---|---|
| 1. | ஓம் அச்சுதனே | போற்றி |
| 2. | ஓம் இருடீகேசனே | போற்றி |
| 3. | ஓம் உடையவனே | போற்றி |
| 4. | ஓம் காகுத்தனே | போற்றி |
| 5. | ஓம் கேசவனே | போற்றி |
| 6. | ஓம் கோவிந்தனே | போற்றி |
| 7. | ஓம் சேவகனே | போற்றி |
| 8. | ஓம் தமிழோசையனே | போற்றி |
| 9. | ஓம் தாமோதரனே | போற்றி |
| 10. | ஓம் திரிவிக்கிரமனே | போற்றி |
| 11. | ஓம் திருக்குறளனே | போற்றி |
| 12. | ஓம் நாரணனே | போற்றி |
| 13. | ஓம் பற்பநாபனே | போற்றி |
| 14. | ஓம் மாதவனே | போற்றி |
| 15. | ஓம் வாசுதேவனே | போற்றி |
| 16. | ஓம் வைத்தமாநிதியே | போற்றி போற்றி |

## அருள்மிகு திருமால் 108 போற்றி

| | | |
|---|---|---|
| 1. | ஓம் அச்சுதனே | போற்றி |
| 2. | ஓம் அண்ணலே | போற்றி |
| 3. | ஓம் அத்தனே | போற்றி |
| 4. | ஓம் அப்பனே | போற்றி |
| 5. | ஓம் அம்மையே | போற்றி |
| 6. | ஓம் அரங்கனே | போற்றி |
| 7. | ஓம் அரியே | போற்றி |
| 8. | ஓம் அரையனே | போற்றி |
| 9. | ஓம் அழகனே | போற்றி |
| 10. | ஓம் அற்புதனே | போற்றி |
| 11. | ஓம் அன்பனே | போற்றி |
| 12. | ஓம் அனந்தனே | போற்றி |
| 13. | ஓம் ஆதிமூர்த்தியே | போற்றி |
| 14. | ஓம் ஆயர்கொழுந்தே | போற்றி |
| 15. | ஓம் ஆராவமுதே | போற்றி |
| 16. | ஓம் ஆவியே | போற்றி |
| 17. | ஓம் ஆழிவண்ணனே | போற்றி |
| 18. | ஓம் இருடீகேசனே | போற்றி |
| 19. | ஓம் இறைவனே | போற்றி |
| 20. | ஓம் இன்பனே | போற்றி |
| 21. | ஓம் ஈசனே | போற்றி |
| 22. | ஓம் உடையவனே | போற்றி |
| 23. | ஓம் உத்தமனே | போற்றி |
| 24. | ஓம் உயிராளனே | போற்றி |
| 25. | ஓம் உலப்பிலானே | போற்றி |
| 26. | ஓம் உற்றாரிலியே | போற்றி |
| 27. | ஓம் எரியே | போற்றி |
| 28. | ஓம் எழிலே | போற்றி |
| 29. | ஓம் ஒண்சுடரே | போற்றி |
| 30. | ஓம் ஒத்தாரில்லானே | போற்றி |
| 31. | ஓம் கடல்வண்ணனே | போற்றி |
| 32. | ஓம் கண்ணனே | போற்றி |
| 33. | ஓம் கருணையே | போற்றி |
| 34. | ஓம் கன்னலே | போற்றி |
| 35. | ஓம் கனியே | போற்றி |
| 36. | ஓம் காகுத்தனே | போற்றி |
| 37. | ஓம் காரணனே | போற்றி |
| 38. | ஓம் குழகனே | போற்றி |
| 39. | ஓம் கூத்தனே | போற்றி |
| 40. | ஓம் கேசவனே | போற்றி |
| 41. | ஓம் கேடிலியே | போற்றி |
| 42. | ஓம் கோவிந்தனே | போற்றி |
| 43. | ஓம் கோனே | போற்றி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44. | ஓம் கௌவுத்தவ மார்பனே | போற்றி | 83. | ஓம் பரஞ்சுடரே | போற்றி |
| 45. | ஓம் சந்தோகனே | போற்றி | 84. | ஓம் பரம்பரனே | போற்றி |
| 46. | ஓம் சதிரனே | போற்றி | 85. | ஓம் பரமனே | போற்றி |
| 47. | ஓம் சாமவேதியனே | போற்றி | 86. | ஓம் பவள வாயனே | போற்றி |
| 48. | ஓம் சிந்தாமணியே | போற்றி | 87. | ஓம் பற்பநாபனே | போற்றி |
| 49. | ஓம் சிரிதரனே | போற்றி | 88. | ஓம் பாம்பணையானே | போற்றி |
| 50. | ஓம் சேயனே | போற்றி | 89. | ஓம் பாவநாசனே | போற்றி |
| 51. | ஓம் சேவகனே | போற்றி | 90. | ஓம் பிறப்பிலியே | போற்றி |
| 52. | ஓம் ஞானமூர்த்தியே | போற்றி | 91. | ஓம் பீதக ஆடைப் பிரானே | போற்றி |
| 53. | ஓம் தமிழோசையனே | போற்றி | 92. | ஓம் புருடோத்தமனே | போற்றி |
| 54. | ஓம் தனியனே | போற்றி | 93. | ஓம் புனிதனே | போற்றி |
| 55. | ஓம் தாசரதியே | போற்றி | 94. | ஓம் பூவைவண்ணனே | போற்றி |
| 56. | ஓம் தாமோதரனே | போற்றி | 95. | ஓம் பைந்தமிழ்ப்பின்சென்றாய் | போற்றி |
| 57. | ஓம் திரிவிக்கிரமனே | போற்றி | 96. | ஓம் மணிவண்ணனே | போற்றி |
| 58. | ஓம் திருக்குறளனே | போற்றி | 97. | ஓம் மதுசூதனனே | போற்றி |
| 59. | ஓம் திருமகள்கேள்வனே | போற்றி | 98. | ஓம் மருந்தே | போற்றி |
| 60. | ஓம் திருமார்பனே | போற்றி | 99. | ஓம் மாதவனே | போற்றி |
| 61. | ஓம் திருவே | போற்றி | 100. | ஓம் வள்ளலே | போற்றி |
| 62. | ஓம் தீர்த்தனே | போற்றி | 101. | ஓம் வனமாலை மார்பனே | போற்றி |
| 63. | ஓம் துய்ப்பனே | போற்றி | 102. | ஓம் வாசுதேவனே | போற்றி |
| 64. | ஓம் தூபனே | போற்றி | 103 | ஓம் விட்டுவே | போற்றி |
| 65. | ஓம் தூதனே | போற்றி | 104. | ஓம் விமலனே | போற்றி |
| 66. | ஓம் தூயனே | போற்றி | 105. | ஓம் வேங்கடவனே | போற்றி |
| 67. | ஓம் தெய்வநாயகனே | போற்றி | 106. | ஓம் வேதவிளக்கே | போற்றி |
| 68. | ஓம் தேவனே | போற்றி | 107. | ஓம் வைகுந்தனே | போற்றி |
| 69. | ஓம் தேனே | போற்றி | 108. | ஓம் வைத்தமாநிதியே போற்றி | போற்றி |
| 70. | ஓம் தேர்வலவனே | போற்றி | | | |
| 71. | ஓம் தைத்திரியனே | போற்றி | | | |
| 72. | ஓம் நரனே | போற்றி | | | |
| 73. | ஓம் நரசிங்கனே | போற்றி | | | |
| 74. | ஓம் நம்பனே | போற்றி | | | |
| 75. | ஓம் நம்பியே | போற்றி | | | |
| 76. | ஓம் நாதனே | போற்றி | | | |
| 77. | ஓம் நாரணனே | போற்றி | | | |
| 78. | ஓம் நிதமலனே | போற்றி | | | |
| 79. | ஓம் நெடியவனே | போற்றி | | | |
| 80. | ஓம் நேமிப்பிரானே | போற்றி | | | |
| 81. | ஓம் பங்கையங்கண்ணனே | போற்றி | | | |
| 82. | ஓம் பச்சைமாமலையே | போற்றி | | | |

**அருள்மிகு திருமால்**

நிறைவாக, அவ்வத் தலத்திற்குரிய
ஒரு பாடலை ஓதி, போற்றியை
நிறைவு செய்யலாம்.

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**

................. பெருமான் அருள்
முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக.
உங்களின் எல்லாவிருப்பங்களும்
நிறைவேறுக! மங்களம் உண்டாகுக!

★★★

**உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்**
**கண்ணன் எம் பெருமான் என்று என்றே கண்கள் நீர் மல்கி**
**மண்ணினுள் அவன் சீர் வளம்மிக்கவன் ஊர்வினவி**
**திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே**

**- நம்மாழ்வார்**

# திருக்கார்த்திகைப்பெருமை

N. லலிதா., M.A., B.Ed.

இறைவனைக் கருணையின் உருவம் என்பது நம் மதத்தின் நம்பிக்கை. திருமால் தானே மீனுருவ மாகவும், ஆமையுருவமாகவும் பன்றியாகவும் பல அவதாரங்கள் செய்து அடியவர்களைக் காத்தார் என்பது நம் மதக்கொள்கை. தன்னை நம்பி அழைத்த யானையை முதலையின் வாயிலிருந்து காத்தார்.

சிவபெருமானோ எறும்புகளைக் காத்தார் (திருவெறும்பூர் புராணம்) நாரையைக் காப்பாற்றினார் என்றெல்லாம் வரலாறு உண்டு. நம்மை எல்லா வுயிர்களுக்கும் அடைக்கலமளிப்பவன் என வேதம் கூறுகிறது. எனவே பன்றியா மனிதனா என்பதெல்லாம் எனக்குக் கிடையாது.

அகில வேத ஆகமபுராணமும் நம்மைச்
சகல சீவதயாபரன் என்றுரை சார்பால்
இகலில்சேதனம் அசேதனம் ஆகியஇரண்டும்
புகலில்வேறல: எமக்கு அவைபொதுமைய
அதனால்

என்று திருவிளையாடற்புராணம் பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்த படலம் பேசுகிறது. நாரைக்கு முத்தி யளித்த படலத்தில் ''எளியவர்கள் எங்கு உள்ளனர் எனத் தேடி அருள் செய்வது உன் பெருமை'' என நாரை சிவபெருமானிடம்

''எளியரெங்குளார் என்றுதேடியே
அளியை ஆவதுன் அருளின் வண்ணமோ''

என்றது.

ஒரு காலத்தில் இறைவனும் இறைவியும் தனியாக இருந்தபோது, எதிரில் எரிந்துகொண்டிருந்த நெய்விளக்கு மங்கி, அணையும் நிலையை அடைந்தது. சிவபெருமான் ''விளக்கை எவராவது தூண்டிவிட்டு ஒளியுண்டாக்கினால் அவருக்கு அரசபதவியளிப் பேன்'' என்றார்.

தற்செயலாக நெய்யைத் திருடியுண்ண வந்த ஒரு எலி தீபத்தின் திரியைத் தீண்டியபோது சுட்டுவிட, அது தன் மூக்கினால் திரியை உதற திரிமேலே வந்து சுடர்விட்டு விளக்கு எரியலாயிற்று. சிவபெருமான் அந்த எலிக்கு அரசனாகப் பிறக்கும் பேற்றையளிக்க, அதுவே மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தது.

அந்த எலி சிவபெருமானது கருணையால் பிரகலாதனது பேரனாக - மகாபலியாய்ப் பிறந்தது. ''உன் குலத்தில் பிறந்தவர் எனக்கு எவ்வளவு குற்றம் செய்தா லும் அவர்களைக் கொல்லமாட்டேன்'' எனத் திருமால் பிரகலாதனுக்கு வரமளித்தார்.

''கொல்லேம் இனிகுலத்தோரைக் குற்றங்கள்
எல்லையிலாதன செய்தாரே என்றாலும்''

(இரணியப்படலம் - கம்பராமாயணம்)

என்று திருமால் கூறியபடி, பிரகலாதன் பேரனாக மகாபலி என்ற பெயருடன் தோன்றியது அந்தஎலி. இறைவன் மகாபலியைக் கொல்லவில்லை.

உலகையெல்லாம் தன்னுடையதாக்கிக் கொண்டு, தேவேந்திரனையும் முடியிழக்கச் செய்தான் மகாபலி. தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி அரக்கரை அழிப்பது திருமாலின் வழக்கம். எவரையுமே கொல்லாத அவதாரம் வாமனாவதாரம். தேவர்களைக் காப்பதற்காக மூவடிமண்வேண்டி, ஈரடியால் மூவுலகளந்து, மூன்றாவது திருவடியை மாபலியின் தலையில் வைத்து அழுத்தி, அவனை இன்னும் பாதாள உலகத்தில் இருக்கும்படி செய்தார்.

எலி மகாபலி சக்கரவர்த்தியாக வந்த வரலாறு. வேதாரண்யபுராணம், அருணாசலபுராணம் இரண்டிலும் காணப்படுகின்றது.

இத்தகைய மகாபலி சக்கரவர்த்தி ஒருநாள் சிவதரிசனம் செய்யத்தனது அரசசின்னம் முதலான ஆடம்பரத்துடன் நுழைந்தபோது, பிரதட்சிணம் வரும் வழியில், அங்கிருந்த நெய்விளக்கின் ஒரு திவலை உடம்பில் பட, உடல் முழுவதும் எரிச்சல் கொண்டு அவதியடைந்தான். பின்னர் ஒருநாள் சிவபெருமான் அவன்முன்தோன்றி ''அரசனே! நீ - நான் - எனது என்ற அகங்காரம் உடையவனாயிருந்ததால் இவ்வாறு நேர்ந்தது. நீ இன்று முதல் நல்லுணர்வுடன் தேவாலயங்களுக்கு நெய்விளக்கேற்று. உனது ரணம் தீரும்'' என்றார். இதுகேட்டு மகிழ்ச்சிகொண்ட மகாபலிசக்கரவர்த்தி எல்லாத் தேவாலயங்களிலும், இருள்சூழ்ந்த இடங்கள்யாவும் ஒளிமயமாக்கி தீபங்களை ஏற்றினான். மகிழ்ச்சிடைந்த சிவபெருமான் கார்த்திகை மாதம் பூர்வபட்சம் கார்த்திகை நட்சத்திரத்தில் அவ

னுக்குக் காட்சியளித்து அருளினார். தேவர்களனை வரும்வெப்பம்(உஷ்ணம்) தணிய அவல்பொரி முதலானவை படைத்தனர். கார்த்திகைமாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் இறைவன் தரிசனமளிக்க காரணமான அந்த தினத்தில் மக்கள் தீபமேற்றி கார்த்திகைப் பண்டிகை கொண்டாட ஆரம்பித்து இன்றுவரை நடைபெறுகிறது.

இவ்வாறு அக்கினி உருவாய்க் காட்சிதந்த இறைவனை ''வேறு மருந்தால் தீர்க்கமுடியாத பிறவியென்னும் நோயை அண்ணாமலையில் உள்ள மருந்து தீர்த்துப்பிறவிநோயை ஒழித்துவிடும். இறைவனே! திருவாரூர் பிறக்க முக்தி. ஆனால் உன் திருத்தலமான திருவண்ணாமலையை நினைக்க முக்தியருள்கிறாய். அதனால் உன்னை அடைக்கலம் புகுந்தேன்.''

வேற்று மருந்தால் விடாத வெம்பிறவியை
மாற்று மருந்தாய் மலைமேல் மருந்தாய்
அழகிய நாயகி அருளுடையநாயகி
புழுகனிநாயகி பொருந்தியபுனிதா!
காசியில்இறந்தும்: கமலையில் பிறந்தும்
தேசமர் தில்லையுள் திருநடம்கண்டும்
அரிதினிற்பெறும்பேறு அனைத்தையும் ஒருகால்
கருதினர்க்கு அளிக்கும் கருணையை விரும்பி
அடைக்கலம் புகுந்தனன் அடியேன்.
இடர்க்கடல் புகுதாது எடுத்தருள் எனவே

எனப்பாடிப் பரவுகிறார் சைவ எல்லப்ப நாவலர் தமது திருவருணைக் கலம்பகத்தில்.

★★★

சோணாசல முதலியார் என்ற கவிஞர் ''கார்த்திகை தீபவெண்பா'' என்ற நூலில்

இன்பம் தரும் தீபம் ஏத்திப்பணிந்தோர்..
துன்ப இருளோட்டும் சுடர்த்தீபம் அன்பர்
அவமறுக்கும் தீபம் அருணைவளர்தீபம்
பவமறுக்கும் கார்த்திகைத்தீபம் ''

என்றும்

புத்திதரும் தீபம் நல்லபுத்திரசம்பத்து முதல்
சித்திதரும் தீபம் சிவதீபம் - சத்திக்கு
உயிராகும் சோணமலை யோங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகைதீபம்.

என்றும் பாடிப் பரவுகிறார் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தின் பெருமையை.

நினைத்தாலே முக்தியளிக்கும் பெருமானை என்றும் மறவாது நினைத்து, அவனது அருட்கண் நோக்கம்பெற்று ஆனந்த வாழ்வுவாழ அவனருளை வேண்டுவோமா?

அண்ணாமலை தொழுவார் வினை
வழுவாவண்ணம் அறுமே
அண்ணாமலைக்கு அரோஹரா
- திருஞானசம்பந்த

திருச்சிற்றம்பலம்.

## அருணாசலப் புராணம் கூறும் கார்த்திகைத் தீபப் பெருமை

கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒரு சோதி
மலை நுனியில் காட்டா நிற்போம்
வாய்த்த அந்த சுடர்காணில் பசிப்பிணி இல்
லாது உலகில் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும் இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்துஓர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்

- சைவ எல்லப்பநாவலர்

# சைவமும் பெரிய புராணமும்

முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை

(முன் தொடர்ச்சி)

**6. குரு, லிங்க, சங்கம நெறி புதுக்கி ஆண்டவனோடு ஒப்பப் பெருவாழ்வு வாழ்ந்த அடியவர்களை வழிபடுவதன் மூலமும் அமரவாழ்வு எய்த இயலும் என நிறுவியது.**

மூவகைப் பூசைமுறைகளை திருமந்திரம் விரிவாக எடுத்துரைத்துள்ளது.[58] அவை: சிவபூசை: குருபூசை: மாகேசுவரபூசை என்பன. முதலாவது, திருக்கோயில்களில் பரார்த்தமாகவும், அன்பர்கள் ்த்தம் இல்லங்களில் ஆன்மார்த்தமாகவும், சிவலிங்கத் திருமேனியை எழுத்தருளிவித்து அன்பு பொதுள இயற்றும் பூசைமுறை''. இரண்டாவது 'குருவே சிவம்' ன்ற வாக்கிற்கு இணங்க, ஞானாசிரியராய் எழுந் ருளியிருந்து அருளுபதேசம் செய்து உயிர்களின் டேற்றத்திற்காக வாழ்ந்திருந்த அடியவர்கள் இறை டியில் இணைந்த நாளில், அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் அன்பர்களால் இயற்றப்பெறும் ூசைமுறை. மூன்றாவது மாகேஸ் வரர்கள் எனப்படும் ன்பர்களுக்கு விருந்தோம்பி அன்னம்பாலிப்பது. பெரியபுராணம் சிவலிங்கத்தைப் பூசித்தும், சிவனருட் செல்வர்களாகிய ஞானாசிரியர்களைப் போற்றியும், வன் அடியவர்களுக்குத் தொண்டு செய்தும் இறையடி ய்த இயலும் என முத்திற வழிபாட்டை மிக விரிவாக டுத்துரைக்கிறது.

பெரியபுராணச் சீரடியார்களில் சிவலிங்கத் ருமேனியை வழிபட்டு வீடு பேறு எய்தியோர் ப்பத்திருவர். குருவருளால் முக்திபெற்றோர் ன்னிருவர். சிவனடியார் வழிபாட்டில் இறையடி ய்தியோர் பத்தொன்பதின்மர்.[59] வேத வழிபட்ட வதிக சமயங்களில் இறைவழிபாட்டால் வீடுபேறு ய்தமுடியும் என்ற கொள்கை முன்னரே மக்கள் த்தியில் நிலவியிருந்தது. அருவுருவத்திருமேனியாக வலிங்கத்தை எழுந்தருள்வித்திருந்த சிவாலயங்கள், தவார ஆசிரியர்கள் காலத்துக்கு முன்னரே இரு ற்றுக்கும் மேல் தமிழகத்தில் நிலவியிருந்தமை நன்கு லனாகிறது. முன்னரே மக்களால் போற்றிவழிபடப் பெற்று வந்த இத்தகு தலங்களுக்கே தேவார மூவர் களும் யாத்திரை மேற்கொண்டு பத்திப் பாமாலைகள் சூட்டி மகிழ்ந்துள்ளனர். இரண்டாவதாகக் 'கண்ணுத லும்' உயிர்களின் ஈடேற்றம் கருதி சிவ பரம்பொருளே குருவடிவாக எழுந்தருளி வருகின்றது என்ற கருத்தும் சைவத்தில் முன்னரே இனங்கண்டு போற்றப் பெற் றிருந்தது.

பெரியபுராணத்தின் தோற்றத்திற்குப்பின் சிவலிங்க வழிபாடு, மற்றும் குருவழிபாடு முதலிய இரண்டிற்கும் இணையாக சிவனடியார்களாகிய மனிதர்களைப் போற்றி, அவர் விருப்பங்களை நிறைவேற்றிச் செய்யப்படும் சங்கம வழிபாடும் தமிழகத்திலே சிறப்பான இடத்தைப் பெறலாயிற்று. படமாடும் கோயில் பரமர்க்கு வழங்குவது நடமாடும் கோயில் நம்பர்களாகிய மனிதர்களுக்கு எட்டாது; ஆனால், அடியவர்களுக்கு வழங்குவது இறைவனுக் குச் சென்று கிட்டும் என்ற எண்ணங்கள் ஏட்டளவில் திருமந்திரம் முதலிய நூல்களில் முன்னரே நிலவி யிருந்தாலும், வரலாற்று அடிப்படையில் இக்கோட் பாடுக்கு வடிவம் தந்து மக்கள் மத்தியில் வழிபாட் டுக்குப் பெருஞ்சிறப்பைத் தோற்றுவித்த பெருமை பெரியபுராணத்திற்கேஉரியது.

பெரியபுராணம் விரிக்கும் பத்தொன்பது அருள் வரலாறுகள் சங்கம வழிபாட்டில் வீடுபேறு எய்திய அடியவர்களை வியப்பன என மேலே சுட்டப் பட்டது. இப்பத்தொன்பது வரலாறுகளையும் கூர்ந்து நோக்குவார்க்கு ஓர் உண்மை நன்கு பளிச்சிடும். இறைவழி நின்ற அளப்பரும் மனிதாபிமானிகள் இவர்கள் என்பதே அது. மனிதர்கள் பால் இவர்கள் காட்டிய நேயம் சமய எல்லைகளையும் கடந்து விளங்கிய அருமைப்பாடு அறிந்து மகிழத்தக்கது. இவர்கள் சிவபிரானைத் தலைவனாகக் கொண்ட சைவநெறியாளர். ஆயினும், சிவநெறி உடன்படும் சமுதாயக் கட்டுக் கோப்புகளையும் கடந்த மனிதாபி மானத்தில் தலை நின்றவர்கள். இவர்கள் தொண்டு

---

திருமந்திரம் ; பாடல் 1805.

பெரியபுராணம், சமாஜபதிப்பு, அறுபத்து மூவர் பக்கம் 49.

சிவனடியாகளுக்கு மட்டும் அன்று, மனித குலத்திற்கே விரிந்து நின்றது. பண்பாடு சிறந்த இவர்தம் மனித நேயத்தில், சிவவேடம் தரித்த பகைவனும் சிவனடி யாரே! பூசாத திருநீற்றைப் பூசிவந்த மாற்றானும் அன்பரே! 'மனைவியைத் தருக' என்று கேட்கும் தூர்த்த வடிவினனிடமும் இவர்களால் அன்பு செய்ய இயன் றது. தாம் உண்ணாது பட்டினி கிடப்பினும், தம் இல்லம் நாடி வந்தாரை உண்பிக்க சமய வழிபட்ட அடியவர் வழிபாடு, பெரியபுராணத்தில் சமயம் கடந்த மனிதாபிமானமாக மனிதகுலநேயமாக மலரும் அருமைப்பாடு எண்ணி மகிழத்தக்கது. மனிதர்க்கு மனிதர் செய்யும் தொண்டு, இறையடி சேர்ப்பிக்கும் என்ற உயர்கோட்பாடு சைவம் வழங்கிய மிகப்பெரும் அருட்கொடை என்றே கருதிப் போற்றத்தக்கது.

**7. சமய வாழ்வில் ஒழுக்கத்தையும் பண் பாட்டையும் மனிதநேயத்தையும் வற்புறுத்திச் சைவத்தை வாழ்வித்தது.**

சமய வாழ்வு ஒழுக்கத்திற்கு அரண்கோலுவ தாக அமைதல் வேண்டும். சமயம் நடைமுறைப் படுத்தப்படும்போது சமூகத்தில் பண்பாட்டை அது மலர்விக்க உதவுதல் வேண்டும், சமயத்தின் உயர் நோக்கம், பிணக்குகள் - வேற்றுமைகள் கடந்தமனித நேயத்தை உருவாக்க உதவும்படி அமைதல் வேண்டும். உலகச் சமயங்கள் பலவும் இவற்றைத் தத்தம் வேதநூல்களில் வற்புறுத்திக்கூறியுள்ளனர். சைவச் சான்றோர்களும் சமயவாழ்வை - சமுதாய வளர்ச்சிக் கும் உயர்ச்சிக்கும் உரிய வகையிலேயே வடித்து வழங்கினர். சைவ சமயநூல்களில் குறிப்பாகப் பேசப்பெற்ற ஒழுக்கம், பண்பாடு, மனித நேயம் முதலியவற்றைப் பெரியபுராணம் வரலாற்று வடிவில் வழங்கி சமய உலகில் அழுத்தமான சுவடுகளைப் பதித்துச்சிறந்தது.

பெரியபுராணத்தில் சேக்கிழாரின் நோக்கம் கதை கூறுவதாக மட்டும் அமையாது. இயன்ற இடங்களில் எல்லாம் சமூகப்பண்பாட்டையும், சமூக நல்லொழுக்கத்தையும் வற்புறுத்தி, இந்நெறி போற்றி வாழ்வோர்க்கு இறைவன் அருள் கிட்டுவது உறுதி என விளக்கிச் சொல்லும் அருமைப்பாடு நினைவு கூர்ந்து மகிழத்தக்கது. உடன்போக்கில் அன்னையையும், அத்தனையையும் நீத்துக் காதலுடன் திருமருகல் வந்து தங்கிய இளமகள் ஒருத்தி விடியலில் தன் காதலன் பிணமாகக் கிடப்பது கண்டு அரற்றுகிறாள். அவள் அழுகையைக் கூறவந்த சேக்கிழார், 'வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்!'[60] என ஒரு தொடர் அமைத்துத் தமிழ்ப் பெண்மையின் பண்பாட்டு ஒழுக்க நெறிக்கு ஒளியூட்டுகிறார். எங்கிருந்தோ இரவில் வந்த வாளரவுக்குக் கூட காதலன் மேனியைத் தீண்டும் உரிமை இருந்தது. ஆயின், ஊரறிய சமூகம் இசைந்த மணவினை நிகழாமையால் இறந்து கிடக்கும்போது கூட இவன் மேனியைத் தீண்டி அழும் உரிமை எனக்கு இல்லையே என்ற காதலியின் குமுறலில் பெண்மையின் அளவற்ற பண்பாடு ஒளி வீசுகின்றது. இறந்த காதலன் உயிர்பெற்று எழுகிறான். இந்த அற்புதம் கூட இரவில், விருப்பத்தோடு, தனி வழி வந்த ஒரு ஆடவனும் பெண்ணும் போற்றிக் காத்த பண்பாட்டுக்குகிடைத்த பரிசோதனை என எண்ணத் தோன்றுகின்றது. பண்பாடு மிக்க ஒரு பெண்ணின் அழுகையும், அரற்றலும் தேவாரமாகப் பதிவு செய்யப்படும் அற்புதம் வியப் பூட்டுகின்றது.'[61]

சமயத்தலைவராகிய திருஞானசம்பந்தரின் பதிகத்தால் உயிர்பெற்று எழுந்த பூம்பாவையை அவருக்கே மணம்முடிக்க விரும்பி சிவநேசர் 'அடி யேன் பெற்ற பாவையைத் திருமணம் புரிந்தருள் செய்யும்' என விண்ணப்பிக்கிறார். புண்ணிய பதினாறு ஆண்டுப் புகலி வேந்தர் இசையமறுக்கிறார். சேக்கிழார் சைவச் சமயத் தலைவர்கள் போற்றிய சமூகப் பண் பாட்டை இனங்காட்ட இந்த இடத்தைப் பயன் படுத்திக்கொள்கின்றார். 'சிவநேசரே' உமது மகளாகிய பூம்பாவைதான் முன்னரே விடத்தால் இறந்தாளே, இதோ உயிர்பெற்று நிற்பவர் இறையருளால் நான் பதிகம் பாடி உயிர்ப்பித்தவள் அல்லவா! ஒரு பெண் ணுக்கு உயிர்தந்தவன் தந்தையாக இருக்க முடியுமே அன்றி கணவன் ஆதல் கூடுமா? தங்கள் உரை பொருந்தாது' என மறுக்கிறார். 'நீர் பெற்ற பெண் விடத்தினால் வீந்த பின்னையான் கற்றைவார் சடையா கருணை காண்வர உற்பவித்தலால் உரைதகாது'[62] தமிழகத்துச் சைவச் சான்றோர் பண்பினை வியக்கும் சேக்கிழார் விளக்கும் பண்பாட்டு ஓவியம் இது. இதே இடத்தில் புராணங்கள் கூறும் பிரமன் வரலாற்றை சுட்டிக்காட்டி,[63] தமிழகத்துச் சைவச்சான்றோர் பண் பினை வியக்கும் சேக்கிழார் திருவுள்ளம் பல்வேறு எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது.

வடபுலத்துக் கபாலி வேடத்தில் வந்த சிவபிரான் சிறுத்தொண்டர் வளமனை முன்நின்று உசாவுகின்றார். இல்லத்துப் பணிமகள், சிறுத்தொண்

60. பெரியபுராணம்; பாடல் 2377.

61. திருஞானசம்பந்தர் தேவாரம். திருமருகல் பதிகம்.

62. பெரியபுராணம் பாடல் 3017.

63. பெரியபுராணம் - பாடல் 3012.

_ரை நாடி வந்திட அடியவரை இல்லத்தில் வந்து அமர்க என அழைக்கின்றாள். கபாலி கூறும் விடை பாகச் சேக்கிழார் குறிக்கும் தொடர், தமிழ் மண்ணின் பண்பாட்டுக்கு அழகு சேர்க்கின்றது. 'மாதரார் நாமிருந்த இடவகையில் தனிப்புகுதோம்,[64] என்பது அடியவர் வாக்கு. இல்லத்திற்கு உரிய ஆடவன் இல்லாது; மகளிர் தனித்திருக்கும்போது அன்னிய ஆடவன் ஒருவன் அவ்வில்லத்தில் புகுவது பண் பாடாகாது என்ற உண்மையை சேக்கிழார் உரிய இடம் நோக்கி இணைக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர்கோன்கலிக்காமர் இல்லம் தேடி வருகிறார். கணவர் பிணம் உள்ளே இருக்கிறது. முறையாக விவருள வேண்டிய அவர் மனைவி பண்பாட்டில் நிலைநின்று 'நம்பி அணைவுறும் பொழுது சால அலங்கரித்து எதிர்ப்போம்' என்று கட்டளையிட்டு அடியாரை எதிர்கொள்ளச் செய்கிறார். பகையில் விளைந்த பெண்மையின் வியப்பூட்டும் பண்பாட்டை ஏயர்கோன் துணைவியார் வழி, சேக்கிழார் சுட்டி சிறமிப்பூட்டுகின்றார். சேக்கிழார் சுட்டிச் செல்லும் இத்தகு பண்பாட்டுக் கூறுகள் பெரியபுராணம் எங்கணும் விரவிக்கிடக்கின்றன. இவற்றை ஒளியூட்டி உலகுக்கு வழங்குவது அறிஞர் கடனாகும்.

**8. பெரியபுராண ஆசிரியர், நூலாசிரியராய் உரையாசிரியராய், தத்துவ ஆசிரியராய், போதக ஆசிரியராய் நின்று சமய நுட்பங்களுக்கு ஒளி யூட்டியது.**

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி வளவ' எனச் சேக்கிழாரைப் போற்றுவார் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.[65] இவர் தாம் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில், ஒரு பாடலில் சேக்கிழாரை நூலாசிரியர், உரை ஆசிரியர் முதலிய பல்வேறு நிலைகளில் படம்பிடித்துக் காட்டி மகிழ் வார்.[66] பெரியபுராணத்தை அதன் நுட்பங்களை விளக்க எழுந்த கவிதை நூல்களுள் நால்வர் நான் மணிமாலை மற்றும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களும் குறிக்கத்தக்க சிறப்புடையன. திருத் தொண்டத்தொகை, மற்றும் திருத்தொண்டர் திருவந் தாதி இவற்றின் துணைக்கொண்டு மூவர் தேவாரம் மற்றும் பிற திருமுறைகளில் காணக்கிடக்கும் விளக்கங் களை இனங்கண்டு பகுத்து கல்வெட்டுகள், செவி வழிச் செய்திகள் முதலியனவற்றை ஆய்ந்து அறிந்து ஒரு பெரும் காப்பியமாகப் பெரியபுராணத்தை வடித்த சேக்கிழார் தலைசிறந்த நூலாசிரியர் என்பது தாமே போதரும்.

பெரியபுராண நூலாசிரியராகிய சேக்கிழார் பெரியபுராணம் படைக்கும் நோக்கில், பல்வேறு திருமுறைப்பதிகங்களுக்கு உரை விளக்கம் தரும் பாங்கு அவரை சிறந்த உரை ஆசிரியராகப் படம் பிடித்துக் காட்டுகிறது. திருஞானசம்பந்தர் பாடிய 'வாழ்க அந்தணர்' என்ற தொடக்கமுடைய பதிகம் 'திருப்பாசுரம்' என வழங்கப்பெறும்.[67] இப்பதிகம் முழுமைக்கும் சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணத் தில் இருபத்துநான்கு பாடல்களில் உரைகூறுகின்றார். முதல் பாடலில் உள்ள ஒவ்வொரு தொடரையும் எடுத்துக்கொண்டு நான்கு பாடல்களில் விளக்கமான உரை கூறுகின்றார். ஏனைய பாடல்களும் இவ்வாறு விளக்கப்படுகின்றன. இவர் உரையால், அரிய அப் பதிகப் பாடல்கள் எவ்வாறு பகுத்து ஆராயப்பட வேண்டுவன என்ற உண்மை நன்கு விளக்கப் பெறு கின்றது. இதனை உட்கொண்டே பிள்ளைத்தமிழ் தோடுடைய செவியன்' என்ற தொடரின் நுட்பம்; 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற பாட லின் உட்குறிப்பு; 'மாசில் வீணையும்' என்று தொடங்கும் பதிக முதற்பாடலுக்குப் பொழிப்புரை முதலிய சேக்கிழாரின் உரைக்கூறுகள் ஏராளம் நூலில் காணப்படுகின்றன.

சேக்கிழார் ஞானாசிரியராய் நின்று சைவ சமய தத்துவங்களை விளக்கும் பாங்கு, அவரையே ஓர் தத்துவ ஆசிரியராக உயர்த்துகின்றது. திருமூலர், காரைக் கால் அம்மையார் புராணங்களில் காணக்கிடக்கும் தத்துவக்கூறுகளும், மூவர்வரலாற்றில் விரித்துரைக்கப் படும் தத்துவ விளக்கங்களும் சமயநோக்கில் பெரிதும் போற்றிக் கொள்ளத்தக்கன. 'அட்டாங்க பஞ்சாங்கமாக' முன்பு முறைமையினால் வணங்கி', 'காண்டலும் தொழுது வீழ்ந்த உடன் எழுந்து கரையில் அன்பு என்பினை உருக்க', 'வேணித் திருமுடிமேல் திருமஞ் சனம் ஐந்தும் அளிக்கும்' முதலாய சரியைப் பற்றிய தத்துவக் குறிப்புகளை நிறைவாகப் பெரியபுராணத்தில் காணலாம். சைவசாதனங்களுள் ஒன்றாகிய திருநீற்றின் சிறப்பு முழுநீறு பூசிய முனிவர் புராணத்தில் விளக்கப் படுகின்றது. வாயிலார், முப்போதும் திருமேனிதீண்டு வார் புராணங்களில் கிரியைக்கூறுகள் காணப்படுகின் றன. யோகக்கூறுகள் திருமூலர் மற்றும் சித்தத்தைச்

---

. பெரிய புராணம் பாடல் 3702.

. சேக்கிழார் பிள்ளைத் தமிழ். 44.

. சேக்கிழார் பிள்ளைத் தமிழ், 55.

. திருஞானசம்பந்தர் தேவாரம் பாடல் 1855.

சிவன்பாலே வைத்தார் வரலாறுகளில் விரவியுள்ளன. அடியவர் வரலாறுகள் பலவும் பக்தியினால் முதிர்ந்த ஞானத்தை விளக்கி நிற்கின்றன. சைவ சித்தாந்தக் கூறுகள் பலவும் சேக்கிழாரால் அழகுற எடுத் தியம்பப்பட்டுள்ளன.

'நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனை செய் நிலையாற் போதகாசிரியன்' என்பது பிள்ளைத் தமிழ் தரும் விளக்கம். பௌத்த சமணக் கட்டுகளிலிருந்து சைவத்தை மீட்கும் முயற்சியில் சேக்கிழாரின் பணி மிகப்பெரிது என்பது நூலில் எங்கும் காணக்கிடப்பது. திருநாவுக்கரசரை சைவத்திற்கு மீட்கும் முயற்சியில் திலகவதியாரின் செயல்கள் மற்றும் சொற்கள் முதலியன சேக்கிழாரின் போதகா சிரியத் திறத்திற்குச் சான்று கூறுகின்றன. பல்லவனின் சைவச் சார்பு; பாண்டியனின் சைவமீட்சி; தண்டி யடிகளின் தொண்டு, நமிநந்தியடிகள் நீரால் விளக் கெரித்தல் முதலியனவாகிய செய்திகள் பலப் பல. இத்துடன், புத்தரொடு வாது செய்தவிடத்து சம்பந்தர் கூற்றால் சேக்கிழார் கூறுவன அனைத்தும் அவரது போதகாசிரியத் திறத்திற்கு சான்றாக அமை கின்றன.

**9. ஏறத்தாழ 500 ஆண்டுக்கால சைவ சமய வளர்ச்சிக்கு வரலாற்றுப் பின்னணியோடு வடிவங் கொடுத்தது.**

'தூக்குசீர்த் திருத்தொண்டத் தொகை விரி வாக்கினாற் சொல்ல வல்லபிரான்' என சேக்கிழாரைப் போற்றுவார் மாதவ சிவஞானசுவாமிகள், 'ஒல்லை அவர் புராண கதை உலகறிய விரித்துரைத்த செல்வமலி குன்றத்தூரில் தோன்றிய சேக்கிழார் சைவச் சான்றோர் களின் போற்றுதலுக்கும், வணங்குதலுக்கும் பாத்திர ராகிறார். புராணம் என்ற குறியீட்டுடன் தமிழில் வழங்கும் பல நூல்களுள் வரலாறாகப் போற்றத் தக்க ஒரே நூல் பெரியபுராணமே. இது புனைகதையன்று. வாழ்ந்த மனிதர்களின் அருள் வரலாறு. இந்த நீண்ட அருட்கதைகளை விரிக்கும் நூலால் சைவம் மட்டும் ஒளிபெறவில்லை; தமிழ்நாட்டின் ஏறத்தாழ 500 ஆண் டுக்கால வரலாறும் ஒளிபெற்றுள்ளது.

சேக்கிழாரின் பெரியபுராணம் தோன்றியிருக்க வில்லையென்றால், அருளாளர்களின் பாடல்களை மட்டும் கொண்டு சைவசமயவரலாற்றை இத்துணைத் துல்லியமாக கணித்தறிய இயலாது. சமயஞ்சார்ந்த நூல்கள் பல மக்கள் நம்பிக்கைகட்கு முன்னிடம் தந்து எழுந்தன. பெரியபுராணம் மானிட இலக்கியம் ஆத லால் வரலாற்று உணர்வுக்கு முன்னிடம் தந்து எழுந்தது. தமிழகத்தில் வேறு எந்த ஒரு சமுதாயத் திற்கும் அதன் 500 ஆண்டுக்கால வரலாற்றை விளக்க வல்ல நூல் பெரியபுராணத்திற்கு ஈடாகத்தோன்ற வில்லை என்பது குறிக்கத்தக்கது. சைவம் எழுச்சி பெற்றமை; செல்வாக்கு; சமயப்போராட்டங்கள்; மூவேந்தர்திறம்; மக்கள்உணர்வுகள்; திருக்கோயி லமைப்புகள்; சைவ இலக்கியங்கள்; நாட்டியல்; சைவத்தின் எழுச்சியோடு ஒட்டிய வளர்ச்சியின் நிலை; சைவப்பண்பாடு; சைவஅடியார் வரலாற்றுக் கூறுகள் எனப் பெரியபுராணம் வழங்கும் சைவ வரலாறு ஒளிபூத்துத்திகழ்கின்றது.

**முடிவுரை**

சேக்கிழாரின் பெரியபுராணத்தின் தோற்றத்திற் கான காரணங்களை முதற்பகுதியாகவும், இவ்வருள் நூலின் தோற்றத்தால் சைவம் எய்திய சிறப்புகளை இரண்டாவது பகுதியாகவும் முறையாக ஆராய்ந்து அகச்சான்றுகளுடன் இக்கட்டுரை நிறுவியுள்ளது. சைவ சமய வரலாற்றில் மானுட இலக்கியமாக நின்று மண்ணின் மைந்தர்களுக்கு ஒளியூட்டிய திறமும், சைவச் சமயச் சீரடியார் வரலாறு சமயங்கடந்த சமூகப் பண்பாட்டு வரலாறாக திகழும் திறமும் இக்கட் டுரையில் விளக்கப்பட்டுள்ளன. சைவ சமயத்திற்குப் பெரியபுராணம் வழங்கிய அருட்கொடை நன்றியோடு இக்கட்டுரையில் நினைவு கூரப்பட்டுள்ளது.

(நிறைவு பெற்றது)

★★★

## ஞானத்தின் அடையாளம் வேல்

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு

1) ஆழம் (2) அகலம் (3) கூர்மை

அடிப்பகுதி ஆழமாயும், நடுப்பகுதி அகலமாயும், நுனிப்பகுதி கூர்மையாயும் உள்ள வேலினை முருகன் தாங்கியிருப்பது அடியார்களுக்கு அவன் ஞானத்தை நல்கி ஆட்கொள்வதன் அடையாளம் ஆகும்.

# திருவண்டப் பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்

— மு.பெ. சத்தியவேல் முருகன், B.E.

உலகில் உள்ள சமயங்கள் பல. அவற்றில் முக்கியமான இருபத்துநான்கு சமயங்களைப் புறப் புறம், புறம், அகப்புறம், அகச்சமயம் என்று நான்கு வகையாக, வகைக்கு ஆறாகச் சித்தாந்தம் பகுத்துப் பேசும். இவற்றில் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நூலை வேதமாகக் கொள்ளும்.

வேதம் என்பது பொதுச் சொல். மறை என்று தமிழில் கூறுவர். கிறித்துவர்களுக்கு வேதம் பைபிள்; முஸ்லீம்களுக்கு வேதம் குர்ஆன். பௌத்தர்களுக்கு வேதம் பிடகம். சீக்கியர்களுக்கு வேதம் கிரந்தம்.

இங்ஙனம் ஒவ்வொரு சமயத்தவருக்கு ஒவ்வோரு வேதம் இருப்பினும் உலகனைத்திற்கும் பொதுவேதம் - பொதுமறை உண்டா என்றால் உண்டு. ஒன்றல்ல, இரண்டு பொதுமறை உண்டு. ஒன்று: திருக்குறள்; இரண்டு: திருவண்டப்பகுதி - மணிவாசகர் இயற்றிய அகவல்

திருக்குறள் பொதுமறை என்று உலகமெல்லாம் கூறுவது தெரிந்ததே. ஆனால் மணிவாசகர் இயற்றிய திருவண்டப்பகுதி எப்போது பொதுமறை ஆயிற்று? என்று சிலரின் புருவங்கள் உயரலாம். அது பொதுமறை என்று இராமலிங்க வள்ளலார் கூறுகின்றார்.

'உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம்
புகழ்ந்தேத்தும்
திருவண்டப் பகுதியெனும் திருவகவல்
வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவரும் கூறுகின்ற
கோவே நீ
இரு என்றத் தனியகவல் எண்ணம் எனக்
கியம்புதியே!''

திருவாசகத்தில் முதல் நான்கு நெடும் பாக்களில் ஒன்றான திருவண்டப்பகுதியை உலகமெல்லாம் பெருமறை என்று ஒருங்கு புகழ்ந்து ஏத்துகின்றது என்கிறார் வள்ளலார். இது ஏதோ கவிஞரின் உபசார வார்த்தைகள் அன்று. வள்ளலாரின் திருவருட்பாக்களில் வெற்று வர்ணனைகள் அதிகம் இராது என்பதை அருட்பாவை முழுமையாகப் படித்தறிந்தவர்கள் உணர்வர்.

திருவண்டப்பகுதி எப்படி பொதுமறை ஆகும்? அதில் கூறப்பட்ட ஆன்மப் பயணமும், ஆன்ம பரிமாற்றமும், ஆன்ம- ஆண்டவன் இணைப்பும் கிறித்துவ, இஸ்லாமிய, சைவ, வைணவச் சமயங்கள் - இன்னும் உலகில் உள்ள சமயங்கள் எத்துணையாயினும் அவற்றாலாகும் பேதமின்றி எல்லோருக்கும் பொது. எனவே பொதுமறை என்று திருவண்டப் பகுதியை வள்ளலார் குறிப்பித்தார்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார்' என்ற வழக்கு மொழியாலும் இது உலக மெலாம் போற்றும் பொதுமறை என்பதற்கு ஆதாரம் அளிக்கப்படுவதனை உய்த்துணர்க. கிறித்துவப் பாதிரியார் G.U. போப் அவர்கள் இதில் ஈடுபட்டதை இதற்கு ஒரு நடைமுறைச் சான்றாகவும் கொள்ளலாம்.

திருவாசகம் உருக்கமுடையதுதான்; எல்லாப் பகுதியுமே இனிமையானதுதான். ஆனால் ஒவ்வொருவர் ஒவ்வொரு பகுதியில் மிகவும் ஈடுபடுவது அவரவர் கண்ணோட்டத்தையும், பக்குவத்தையும், இயல்பையும் பொறுத்தது. திருவாசகம் முழுமையும் முதன் முதலில் எழுத்து வடிவில் எழுதியவர் அழகிய திருச்சிற்றம்பலம் உடைய ஆண்டவன். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பத்துக் கம்பன் எனப் பேர்பெற்ற கற்பனைக் களஞ்சியம். அவர் தமக்கே உரிய பாணியில் பாடுவது காண்க:

எழுதிடும் வேலை பூமேல் இருப்பவன் இயற்றப்
போக்கி
எழுதுதல் இல்லாநூல் சொற்று இனிதமர் தருமா
தேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற்று இயைதரப்
பெயரும் ஈற்றில்
எழுதிடச் செய்த கோமான் இணையடி
முடிமேல் வைப்பாம்.

இங்ஙனம், எழுதுகிற வேலையா, நம்மால் ஆகாது என்று சோம்பி ஒதுங்கி உயிர்கள் ஒவ்வொன் றின் தலையிலும் எழுதுகிற வேலையை பிரம்மா விற்குத் தள்ளிவிட்டு, அவன் படைப்பதற்கு அடிப் படையாகக் கொள்ளவேண்டிய மறையையும் வாயி னால் சொல்லி அவனைச் செய்யச் செய்து எழுதாக் கிளவியாக மறையை அளித்த சிவபெருமானை - அம்பலவனை உட்கார்ந்து எழுது,எழுது எனப் பல பாக்களைச்சொல்லி எழுத வைத்தது மட்டுமல்லாமல், இதுவரை தன்பெயர் என்னவென்று கூறாமல் போக் குக் காட்டி வந்த கடவுளைத் தம்பெயரை அழகிய சிற்றம்பலமுடையான் என்று எழுதிக் கையொப்ப மிடச் செய்த மணிவாசகரைப் போற்றுவாம் என்பது பாடலின் கருத்து.

இங்ஙனம் திருவாசகம் 658 பாடல்களையும் தம் கைப்பட எழுதிய இறைவன் ஈடுபட்டது திருவெம்பாவையில். அவர் சிவபுராணம் பாடிய வாயால் கோவை பாடுக என்று கூறாமல், திருச்சதகம் பாடிய வாயால் கோவை பாடுக என்று கூறாமல், பொன்னூசல் பாடிய வாயால் கோவை பாடுக என்று கூறாமல் இப்படி திருவாசகத்தின் பிறபகுதிகளை யெல்லாம் எடுத்துக்கூறாமல் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று வேண்டினார் என்ற வரலாறே சிவபெருமானுக்குத் திருவெம்பாவையில் எத்தனை ஈடுபாடு என்பதைத் தெளிவாக்குகிறது.

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் திருச் சதகத்தில் ஈடுபட்டார்; பாம்பன் சுவாமிகள் குழைத்த பத்தில் ஈடுபட்டார்; இப்படி ஒவ்வொருவர் திரு வாசகப்பகுதி ஒவ்வொன்றில் ஈடுபட்டனர்.

இராமலிங்க வள்ளலார் திருவண்டப் பகுதியில் மிகவும் ஈடுபட்டார். அத்துடன் மட்டும் அமையவில்லை அவரது ஆர்வம். திருவண்டப் பகுதியை ஓர் ஓலை நறுக்கில் எழுதி அந்த ஓலை நறுக்கினைத் தமது குடுமியில் முடிந்து வைத்துக் கொண்டிருந்தார் என்று செவிவழிச்செய்தி கூறுகிறது.

இங்ஙனம் வள்ளலார் திருவண்டப் பகுதி யினைத் தலையில் முடிந்து வைத்ததன் காரணம், இந்த ஞான அனுபவப் பனுவல் தமது சகஸ்ராரப் பகுதியில் என்றும் பட்டுக்கொண்டே இருக்குமானால் என்றாவது ஒரு நாள் அதில் கூறப்பட்ட இறை யனுபவம் தமக்கு வாய்த்துவிடாதா என்ற ஆவல்தான். வள்ளலார் போன்ற ஞானிகளே இங்ஙனம் போற்றுவாரானால் திருவண்டப்பகுதியின் பெருமையைப் பற்றி வேறு ஏதும் கூறவேண்டுமா என்ன?

இதுபற்றி மாணிக்கவாசகரிடம் நேரிடையாக ஒரு வேண்டுகோளை விடுக்கிறார் வள்ளலார். எத்தனை எத்தனையோ பெருந்தவர்கள் எல்லாம் கூடிநின்று எம்முடைய குருவே என்று போற்றிப்புகழும் மணிவாச கப் பெருமானே! உமது திருவாய்வழி வழிந்த அனுபவச் செழுந்தமிழினைத் தேக்கிய திருவண்டப்பகுதி என்று தலைப்பிடப்பட்ட திருஅகவலில் என் மனம் தோய்ந்து நிற்கிறது. அந்தோ! குறையனுபவம் பெற்ற எனக்கு நிறையனுபவமான இறையனுபவத்தை விண்டுரைத்த அகவலின் முழுப் பொருளை உணர மாட்டாதவனாயினேன்! ஆகவே எமக்குக் குருவாகிய தாங்கள் என்னைத் தாயன்போடு அருகழைத்து என் பக்கத்திரு, உனக்குத் திருவண்டப் பகுதியின் பொருளை உரைப்பேன் என்று அதன் உட்கிடக்கையை உள்ளவாறே உரைத்தருளவேண்டும் என்று வேண்டு கிறார் வள்ளலார்.

இரு என்று அத்தனியகவல் எண்ணம் எனக் கியம்புதியே' என்ற வள்ளலாரின் பாடல் ஈற்றடிக்கு வேறு ஒரு குறிப்புரையும் உண்டு. திருவண்டப் பகுதியின் ஈற்றுப் பகுதியில் மணிவாசகப் பெருமான் என்னையும் இருப்பதாக்கினன்' எனப் பாடியுள்ளார். அதன் பொருள் என்னை என்றும் உள்ளவனாகச் செய் தவன் என்ற பொருள் கொண்டு, அது மரணமில்லாத் தன்மையைக் குறித்ததாகக் கொண்டு, அத்தன்மையை அதாவது என்றும் இருக்கும் தன்மையை வெளிப்பட மொழிந்த சிறந்த அகவலின் பொருளை எனக்குக் கூறுவாயாக என்று உரைப்பவர்களும் உள்.

திருவண்டப்பகுதியில் 'இருப்பதாக்கினன்' என்று வரும் வினைமுடிவு வேறு; வள்ளலார் கூறும் 'இரு' என்ற வினையெச்சம் வேறு. எனவே ஒன்றற் கொன்று முடிச்சுப்போடுதல் சரியன்று. இருப் பதாக்கினன் என்று வினையானது முற்றி விட்டமையால் சொல்லெச்சமாக வேறு ஒன்றையும் கொள்ளஇயலாது.

'முன்னோன் காண்க, முழுதோன் காண்க' எனவும் இன்னும் இங்ஙனம் 'காண்க' எனவரும் வரிகள் பலவும் திருவண்டப்பகுதியில் உள்ளமையால் உலகவர்க்கு விடுத்த வியங்கோளாகக் கொண்டு 'உலகோரே! என் போன்ற சிறியனையும் எனது சிறுமையைப் பொருட்படுத்தாது என்றும் இருப் பவனாக்கினான்! எனவே நீங்களும் முயன்றால் என்றும் உள்ளவர்கள் ஆகலாம்' என்ற குறிப்புப் பொருள் எச்சமாக வர வாய்ப்புள்ளது.

இங்கே, இருப்பதாக்குதல் மரணமில்லாத் தன்மையைக் குறித்ததானால் 'அருளொடு பராவமுதாக் கினன்' என்று உடனாகவரும் வரிகள் பெருவாழ் வினைப் பெற்றதைக் குறிக்கும். எனவே 'என்னையும் இருப்பதாக்கினன்' என்ற வரியும் 'அருளொடு பராவமுதாக்கினன்' என்ற வரியும் சேர அது

மரணமிலாப் பெருவாழ்வினைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

எனவே இரண்டு மூன்று வரிகளைச் சேர்த்துப் பார்க்கக் கிடைக்கும் பொருளான 'மரணமிலாப் பெரு வாழ்வினை' இரு என்ற ஒரு சொல்லில் மட்டும் ஏற்றிக் கூறுவது வலிந்துரையாகும். எனவே நேரிதாக, ''பெருமானே! நீரே எவர்க்கும் குரு! நீரே எமக்கும் குரு! குரு சிடனைப் பக்கத்தமர்த்தி உபதேசிப்பது போல என்னை அருகிருத்தி அந்தச் சிறப்புவாய்ந்த திருவண்டப்பகுதி என்னும் அகவலின் உட் கிடக் கையை எனக்கு உரைத்தருளுக'' என்று பொருள் கொள்ளுவதே ஏற்கத்தக்கதாகும்.

குருவிடம் சிடன் உபதேசம் பெறுவதற் கொப்பாக விழுமிய பொருளை உள்ளடக்கிய இந்தத் திருவண்டப்பகுதியினை நான்கு பகுதிகளாகத் தொகுத்துக் கூறலாம்:

1. இறைவனது உலகைக் கடந்தநிலை.
2. இறைவனது உலகிற்குட்பட்ட நிலை.
3. இறைவன் உயிர்க்குத் தலைவனாகும் நிலை.
4. இறைவன் உயிர்களைத் தான் தானாகச் செய்யும் முறைமை.

''அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்'' என்று திருவண்டப்பகுதியில் தொடங்கும் வரி முதலாக ''கீடம் புரையும் கிழவோன்'' எனவரும் 19 வரிகள் இறைவனது உலகைக் கடந்த நிலையையும் இயல்பையும் கூறுகின்றது.

'நாடொறும் அருக்கனிற் சோதி அமைத்தோன் என்று தொடங்கும் வரியிலிருந்து 'மருவி எப் பொருளும் வளர்ப்போன் காண்க' எனவரும்வரிவரை 14 வரிகள் இறைவன் உயிர்கட்குத் தலைவனாகும் நிலையையும் இயல்பையும் கூறுகின்றது.

'நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க' எனத் தொடங்கும் வரி முதல் 'அவனெனை ஆட் கொண்டருளினை காண்க' என வரும் வரி வரை 14 வரிகள் இறைவன் உயிர்கட்குத் தலைவனாகும் நிலையையும் இயல்பையும் கூறுகின்றது.

இதன்பின் வருவன இறைவன் பக்குவ உயிரினத்தான் தானாகச் செய்யும் முறைமைபற்றி மணிவாசகரின் சொந்த அனுபவத்தை உதாரணமாகக் காட்டிக் கூறப்பட்டது.

மேற்கூறியவாறு நான்கு நிலைகளையும் கூறும்போது இயல்பாகவே விஞ்ஞான உண்மைகளை இழைந்து வரும்படி எங்ஙனம் மணிவாசகர் பாடி யுள்ளார் என்பதை இங்கே இனி காணுவோமாக.

உலகம் உருண்டை என்பது ஓர் விஞ்ஞான உண்மை. ஆனால் இதனை விஞ்ஞானம் விளம்பியது ஏறத்தாழ 14-ம் நூற்றாண்டில். இன்னும் சொல்லப் போனால் இந்த உண்மையைக் கூறியதால் ஒரு விஞ்ஞானியின் உயிர் பலி கொடுக்கப்பட்டது.

உலகம் தட்டையாகப் பாய்போல் விரிந்து கிடப்பதாகவும், சூரியனும் சந்திரனும் இந்தத் தட்டை உலகிற்கு மேலே பகல் ஒளியாகவும், இரவொளி யாகவும் திரியும்படி இறைவனால் படைக்கப் பட்டதாகவும் முதலில் கூறப்பட்டது கலிலியோ என்ற விஞ்ஞானி வந்தான். உலகம் தட்டையல்ல; உருண்டை என்றான். உலகம் அசையாமல் இருப்பதல்ல; தன்னைத்தானே அது சுற்றிக்கொண்டிருக்கிறது என்றான். அத்துடன் பூமி சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்றும் கூறினான். இதெல்லாம் நிருபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளாகப் பள்ளிச் சிறுவர்களும் அறிவர்.

ஆக உலகம் உருண்டை என்ற ஓர் விஞ்ஞான உண்மையைக் கூறியதால் கலிலியோ என்ற விஞ் ஞானியின் உயிர் பறிபோயிற்று.

ஆனால் இந்த விஞ்ஞான உண்மையை மணிவாசகர் 3-ம் நூற்றாண்டிலேயே கூறிவிட்டார். இந்த அண்டப்பகுதி உருண்டைவடிவில் தொகுதி தொகுதியாக உள்ளது என்று திருவண்டப்பகுதியை ஒரு விஞ்ஞான உண்மையைக் கூறிக்கொண்டே தொடங்குகின்றார்.

''அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்'' பிறக்கம் - தொகுதி; குவியல் என்று பொருள்.

கலிலியோ கோள்கள் உருண்டைவடிவில் உள்ளவை என்று கூறினாலும் பின்வந்த விஞ்ஞானிகள் அவை முழுவட்ட வடிவினதல்ல; கொஞ்சம் தட்டை செய்யப்பட்ட வட்டம், அதாவது கோழிமுட்டை வடிவில் உள்ளது (Elipse) என்று கூறுகின்றனர். அதோடு அவற்றின் பயணப் பாதையும் தட்டை வட்டவடிவில்தான் உள்ளது என்பது அண்மைக்கால விஞ்ஞானம் அறுதியிட்டுக் கூறுகிறது. சூரியனின் பயணப்பாதை தட்டை வட்ட வடிவில் இருப் பதால்தான் பருவங்கள் உலகில் ஏற்படுகின்றன. ஒரு பருவம் கோடையாக வெப்பம் மிகுந்ததாகவும் ஒரு பருவம் குளிர்மிக்கதாகவும் மாறிமாறிவருவதற்குக் காரணமே இதுதான்.



சேலம் மாவட்டம் இளம்பிள்ளை வட்டத்திலுள்ள அருள்மிகு கஞ்சமலை சித்தர் ஆலயத்தில் திருவலகு பணிபுரிந்த சின்னதம்பி அவர்கள் அமரரானார். அவர் மனைவிக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குடும்பநல நிதி ரூபாய் முப்பதினாயிரம் வழங்குகிறார்கள்.

இதையெல்லாம் உள்ளடக்கியே 'அண்டப் பகுதியின் உண்டை' என்று மணிவாசகர் கூறினார். அண்டம் என்றால் கோழிமுட்டை என்று பொருள் உண்டு. கோழிமுட்டை வடிவில் உள்ள உருண்டை என்று கோள்களின் வடிவம் கூறி இவை தொகுதி தொகுதியாக வானில் உள்ளன என்று கூறினார்.

ஒரு சூரியன், அதைச் சுற்றிலும் கோள்கள் என உள்ள அமைப்பு அண்டம் எனப்படும். இது போன்று ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியன்; அதைச் சுற்றிலும் கோள்கள் என அண்டங்கள் பல உண்டு. இவை பிரபஞ்சத்தின் ஒரு பகுதி எனக் குறிப்பிடுவார் போல அண்டம் என்றுமட்டும் கூறியொழியாது அண்டைப்பகுதி எனக்கூறி நிலைநாட்டினார்.

இதுபோன்று எத்தனை அண்டங்கள் உள்ளன? மணிவாசகர் கூறினார்: 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'.

முதன் முதலில் விண்வெளியில் சென்ற மனிதர் யூரிகாரிகான் என்ற இரஷியர். இவர் விண்வெளியில் சென்று சந்திரனை அடையவேண்டும் என்று அனுப்பப்பட்டார். ஆனால் இவர் சந்திரனை அடையமுடியவில்லை. ஆனால் சந்திரனுக்கு மிக அருகாமையில் விண்வெளியில் சஞ்சரித்த முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றவர். இவர் பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்து பூமியைப் பார்த்தார். பூமி ஒரு அற்புதமான உருண்டையாகத் தெரிந்ததாம். சூரியனது காலைத் தோற்றத்தைப் போல பூமியினது ஒளி வர்ண ஜாலத்தோற்றத்தைக் கண்டவர் தாம் கண்ட அதிசய அனுபவத்தால் கூக்குரல் இட்டாராம். பூமிக்குத் திரும்பி வந்தபோது அவருக்கு அளித்த வரவேற்புக் கூட்டங்களில் எல்லாம் இதைப் பற்றிக்கூறி தன்னால் அக்காட்சியை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியவில்லை - அவ்வளவு அற்புதமாக இருந்தது என்று கூறினாராம்.

*(தொடரும்)*

★ ★ ★

# சிவபெருமானுக்குகந்த வில்வம் திருமாலுக்கு உகந்த துளசி

— டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

**வில்வத்தின் மகிமையும் அதன் தத்துவமும்**

வில்வத்தால் சிவனை அர்ச்சிப்பதன் சிறப்பு பற்றி முசுகுந்த சக்கரவர்த்தியின் வரலாறு நன்கு விளக்கும். முசுகுந்த சக்கரவர்த்தி முற்பிறப்பில் ஒரு வானரமாகக் கைலாயமலையில் வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் கைலாயத்தில் சிவபெருமான் பார்வதி தேவியுடன் வில்வமரத்தடியில் அமர்ந்து வேதாந்த விஷயமாக உரையாடிக்கொண்டிருந்தார். அது சமயம் அந்த மரத்திலிருந்தே ஒரு வானரம் (முசு) வில்வ இலைகளை பறித்துக் கீழே போட்டுக் கொண்டே இருந்தது. அந்த இலைகள் கீழே வீற்றிருந்த பார்வதிதேவியின் மேல்விழ, உரையாடல் தடைப்பட்டது. பார்வதி தேவி மேலே நோக்கினாள். தேவியின் பார்வை வானரத்தின் மேல்பட்ட மாத்திரத்தில் வானரத்துக்கு ஞானம் உண்டாகிக் கீழே இறங்கிவந்து இறைவனையும் தேவியையும் வணங்கித்தான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பு கேட்டது. அதற்கு இறைவன் தம்மையும் தேவியையும் வில்வஇலையால் அர்ச்சிப்பது போல் மேலிருந்து போட்ட செயல் அர்ச்சனைக்குச் சமம் என்றும், அதன் பயன் இந்த வானரம் ''அடுத்த பிறவியில் ஒரு பெரிய சக்கரவர்த்தியாய் பூலோகத்தில் பிறக்கும்'' என்றும் வரம் அளித்தார். அதைக் கேட்ட அந்த வானரம் ''பூலோகத்தில் மனிதர்கள் சூதுவாது உடையவர்கள். அங்கு போய் பிறக்க நான் விரும்பவில்லை. கயிலையிலேயே இருந்து விடுகிறேன்'' என்று சொல்லிற்று.

அதற்கு இறைவன் ''யார் எந்தக் காரியம் செய்தாலும் அதற்குரிய பலன்களை அடையத்தான் வேண்டும்'' என்று சொன்னார். அப்படியானால் பூலோகத்தில் பிறந்தால் ''முகம் மாத்திரம் வானரமாக இருக்கும்படி அருளவேண்டும்'' என்று வானரம் கேட்டுக்கொண்டது. காரணம்? ''நான் என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தால் எனக்கு முற் பிறவி நினைவு வரும். அதனால் இறையுணர்வும் பக்தியும் பெருகும்'' என்று தெரிவித்தது. சிவபெருமானும் அப்படியே அருள, உலகம் வியக்கத்தக்க அரசனாகச் சீரும் சிறப்புமிக்க முசுகுந்த சக்கரவர்த்தியாக தமிழகத்திலேயே பிறந்து, சோழநாட்டை அரசாண்டார். அவர் திருவாரூர் தியாகராஜர் சுவாமி மீது ''முசுகுந்த சகஸ்ரநாமம்'' என்று ஓர் ஆராதனையையே ஏற்படுத்தினார். வானரம் வில்வத்தால் உமா தேவியினை அர்ச்சித்து, அரசப் பதவி பெற்றது என்றால் மனிதர்களாகிய நாம், ஆறு அறிவோடு வில்வத்தினால் அர்ச்சித்தால் எத்தகைய உயர்ந்த நற்கதி அடையலாம் என்பதை தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

இன்னொரு சம்பவம் சொல்கிறேன். புலிக்கு அஞ்சி வில்வமரத்தில் ஏறிய வேடன் தூக்கம் வராமலிருக்க வில்வ இலையைக் கீழே பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான். அவனையும் அறியாமல் கீழே மண்ணிற்குள் மறைந்திருந்த லிங்கத்தின் மேல் அந்த வில்வ இலைகள் விழுந்ததால் அவனுக்கு மோட்சம் கிடைத்தது என்றால் மனிதர்களாகிய நாம், ஆறு அறிவோடு வில்வத்தினால் அர்ச்சித்தால் எத்தகைய உயர்ந்த நற்கதி அடையலாம் என்பதை தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

வில்வ மாலையை வெள்ளிக் கிழமைகளில் திருப்பதி வெங்கடாசலபதிக்கும் சாத்து கிறார்கள்.

சங்கரநாரயணனை வில்வமும், துளசியும் கொண்டு அர்ச்சிப்பதால் சிவபெருமானின் அருளும் திருமாலின் அருளும் ஏககாலத்தில் கிடைக்கின்றன. வில்வமும் துளசியும் பலநோய்களை நீக்குவதுடன் கடவுளுக்கும் அர்ச்சிக்கப்படுவதால் தெய்வீக சக்தியும் சேர்ந்து ஏற்படுகிறது.

துளசியும் வில்வமும் பல நோய்களை நீக்கும் சிறந்த மூலிகைகள் ஆகும். துளசி எனப்படும் திருத்துழாய் திருமாலுக்கே உரியதாகவும். கூவிளம் எனப்படும் வில்வம் சிவபெருமானுக்கே உரிய அர்ச்சனை இலையாகவும் போற்றப்பட்டு வந்திருக்கின்றன என்ற செய்தினை, வேதபுராண சாத்திரங்களிலும் தமிழிலுள்ள நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், சைவத் திருமுறை போன்ற நூல்களிலும் காண்கிறோம். திருத்துழாய் சிவபெருமானுக்கு விலக்கல்ல. அதனைச் சிவபெருமான் தம்முடிமீது அணிந்துள்ளார் என்பதனைக் கீழ்வரும் திருநாவுக் கரசரின் திரு நெய்த் தானத் தேவாரப் பாசுரங்கள் புலப்படுத்தும்.

''கொய்மலர்க் கொன்றை ''துழாய்'' வன்னி
மத்தமும் கூவிளமும்
மெய்மலர் வேய்ந்த விரிசடைக் கற்றை விண்
ணோர் பெருமான்'' (நான்காம் திருமுறை)

''தூங்கான், துளங்கான், ''துழாய்'' கொன்றை
துன்னிய செஞ்சடைமேல்
வாங்கா மதியமும், வாளரவும், கங்கைதான்
புனைந்தான்,
தேங்கார் திரிபுரந்தீயெழ எய்து இக்கருத்து
நீங்கான் உமையவளோடு நெய்த்தானத்
திருந்தவனே'' (நான்காம் திருமுறை)

அஃதே போன்று வில்வமும் திருமாலுக்கு விலக்கல்ல என்பதனை,

''கள்ளார் துழாயும் கணவளரும் கூவிளமும்
முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால்
புள்ளாய், ஓர் ஏனமாய் புக்கிடந்தான் பொன்
னடிக் கென்று
உள்ளதார் உள்ளத்தை உள்ளமாகக்
கொள்ளோமே''

என்று நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழிப் பாசுரம் சுட்டிக்காட்டும்.

வில்வமரத்தில் இலட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ இலை இலட்சம் பொன்னால் ஆன பூவிற் குச்சமமாகும். ஒரு வில்வ இலை சிவனுக்கு அர்ப்பணித் தால் சகல பாவங்களும் நீங்கி அனைத்து நன்மை களும் உண்டாகும்.

மாதப்பிறப்பு, திங்கட்கிழமை, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அட்டமி, நவமி நாட்களில் வில்வம் பறிக்கக்கூடாது.

வில்வமரம் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் :

1. அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.
2. ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பெரும் புண்ணியமும் கிடைக்கும்.
3. கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும்.
4. காசி முதல் இராமேஸ்வரம் வரையுள்ள சிவத் தலங்களை வழிப்பட்ட பயன் கிடைக்கும்.

இந்த வில்வத்துக்கு மற்றொரு பெயரும் உண்டு. அப்பெயர் கூவிளம் என்பது. இந்த கூவிளம் என்ற பெயரை சித்தர் திருமூலர் வைத்தார்.

இறைவன் விரும்பி உகக்கும் வில்வ இலை கள் உடல்ஆரோக்கியத்துக்கும் சிறப்பாகத்துணை புரி கின்றன. துளசியும் அப்படித்தான். வில்வமரம் இந்தியாவில் எல்லா இடங்களிலும் காணப்படு கின்றது. இது தமிழகத்தின் தொன்மையான மரப் வகுப்பைச் சார்ந்ததாகும். இந்தியக் கண்டத்தில் இருக்கும் எல்லா ஆலயங்களிலும் தமிழகத்தின் சிவத் தலங்களிலும் வளர்க்கப்படுகின்றன.

இதன் இலைகளைப் பூஜைக்கு உபயோகிக் கின்றனர். ஆலயங்களில் தரிசிக்க வருவோர்களுக்கும், இந்த வில்வ தீர்த்தம் கொடுக்கப்படுகிறது. சிவத் தலங்களில் காணப்படும் வில்வ மரக் காற்றுக்கும் நோய்தீர்க்கும் சக்தியும் பெருமையும் உண்டு என லாம். மற்றும் வில்வமரத்தடி வாசமும் உடல்நலத்திற்கு ஏற்றது. எல்லா மரங்களைவிட மருத்துவத்தில் தலை சிறந்த மரம் எது என்றால் வில்வமரம்தான்.

தொழுநோய் உள்ளவர்கள் அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் குளித்துவிட்டு ஈர உடையுடன் நூறுஆண்டுகள் முதிர்ந்த வில்வமரத்திலிருந்து ஒரு கைப்பிடி வில்வத் தழையைப் பறித்து வெறும் வயிற்றில் நன்றாக மென்று சாப்பிட்டு, ஒரு மணிநேரம் அல்லது 48 முறை கோயிலைச் சுற்றிவலம்வர 9 மாதங் களுக்குள் தொழுநோய் மறையும்.

## துளசியும் வில்வமும்

திருமாலுக்கு உகந்தது துளசி.
சிவனுக்கு உகந்தது வில்வம்.

| | |
|---|---|
| சிவம் - சூடு | விஷ்ணு - குளிர்ச்சி |
| சிவன் - அனல் | விஷ்ணு - நீர் |

இதனால் சிவாலயத்தில் வெந்த நீறும்
திருமால் கோயிலில் குளிர்ந்த துளசியையும், தரு வார்கள்.

சூட்டைத் தணிப்பது வில்வம்.
குளிர்ச்சியைத் தவிர்ப்பது துளசி.

இதனால் சிவாலயத்தில் வில்வார்ச்சனையும் விஷ்ணு ஆலயத்தில் துளசி அர்ச்சனையும் நடை பெறுகின்றன.

## பொதுப்பண்பு

காக்கும் தெய்வமான திருமாலின் திருக் கோயில்களில் - பிரசாதமாக துளசி தீர்த்தம் வழங்கப் படுகிறது. ஆம்! நம்மைக் காக்கும் தெய்வமான திருமால் நம்மை நோயினின்று காக்க அருட் பிரசாத மாக துளசி தீர்த்தம் தருவது புராண வழக்கமாக இருந்தாலும் இந்த விஞ்ஞானயுகத்திற்கு - மனவாழ்வு சிறக்க திருமாலை வணங்குவோம்! உடல்வாழ்வு நிலைக்க திருமால் பத்ரமாம் துளசியை உண்போம்! 'துளசி' சிறந்தநோய் தடுப்புச்சாதனம்.

★★★

# திருமுறைகளில் பயின்றுள்ள திருத்தலங்களும் இறைவன் - இறைவி திருப்பெயர்களும்

(முன் தொடர்ச்சி)

| வ. எண் | தலத்தின் பெயர் | இறைவன் பெயர் | இறைவி பெயர் |
|---|---|---|---|
| 31. | திருவானைக்கா | ஆனைக்கா அண்ணல் | அகிலாண்டநாயகி |
| 32. | திருஇடும்பாவனம் | இடும்பாவனத்திறைவர் | மங்களநாயகி |
| 33. | திருஇடைச்சுரம் | இடைச்சுரநாதர் | இமயமடக்கொடியம்மை |
| 34. | திருவிடைமருதூர் | மகாலிங்கேசுவரர் ஏகநாயகர் | பெருநலமாமுலைநாயகி |
| 35. | திருஇடையாறு | இடையாற்றீசுரர் | சிற்றிடைநாயகி |
| 36. | திருஇந்திரநீலபருப்பதம் | நீலமலைநாதர் | நீலாம்பிகை |
| 37. | திருஇராமனதீச்சுரம் | இராமநாதேசுரர் | கருவார்குழலியம்மை |
| 38. | திருஇராமேச்சுரம் | இராமநாதர் | மலைவளர்காதலியம்மை |
| 39. | திருஇரும்பூளை(ஆலங்குடி) | காசிவனநாதர் | ஏலவார்குழலியம்மை |
| 40. | திருஇரும்பைமாகாளம் | மாகாளேசுவரர் | குயில்மொழியம்மை |
| 41. | திருஇலம்பையங்கோட்டூர் | சந்திரசேகரர் | கோடேந்துமுலையம்மை |
| 42. | திருஇன்னம்பர் | எழுத்தறிநாதர் | கொந்தார் பூங்குழலி |
| 43. | திருஈங்கோய்மலை | ஈங்கோய்மலைஈசர் | மரகதவல்லியம்மை |
| 44. | திருஉசாத்தானம் (கோயிலூர்) | உசாத்தானப்பெருமான் | பெரியநாயகியம்மை |
| 45. | திருவூறல் (தக்கோலம்) | உமாபதீசுவரர் | உமையம்மை |
| 46. | திருஎதிர்கொள்பாடி | ஐராவதேசுவரர் | மலர்க்குழல் மாதம்மை |
| 47. | திருஎருக்கத்தம்புலியூர் (இராசேந்திரபட்டினம்) | நீலகண்டஈசுவரர் | நீலமலர்க்கண்ணம்மை |
| 48. | திருஎறும்பியூர் | ஏறும்பீசுவரர் | நறுங்குழல்நாயகி |
| 49. | திருவேடகம் | ஏடகநாதர் | ஏலவார்குழலி |
| 50. | திருவையாறு | ஐயாறப்பர் | அறம்வளர்த்தசெல்வி |
| 51. | திருவொற்றியூர் | எழுத்தறியும்பெருமான் | வடிவுடையம்மை |
| 52. | திருவோணகாந்தன்தளி (காஞ்சிபுரம்) | ஓணகாந்தஈசர் | காமாட்சியம்மை |
| 53. | திருவோத்தூர் | வேதநாதர் | இளமுலைநாயகி |
| 54. | திருஓமாம்புலியூர் | துயர்தீர்த்தநாதர் | பூங்கொடிநாயகி |
| 55. | திருக்கச்சிஅநேகதங்காபதம் | அநேகதங்காபதேசுவரர் | காமாட்சியம்மை |
| 56. | திருக்கச்சி ஏகம்பரம் | ஏகாம்பரநாதர் | ஏலவார்குழலி காமாட்சியம்மை |
| 57. | திருக்கச்சிநெறிக் காரைக்காடு | காரைத்திருநாதர் | காமாட்சியம்மை |
| 58. | திருக்கச்சிமேற்றளி | திருமேற்றளிச்செல்வர் | காமாட்சியம்மை |
| 59. | திருக்கச்சூர் | விருந்திட்டஈசுவரர் | மையார் நெடுங்கண்ணி |
| 60. | திருக்கஞ்சனூர் | கஞ்சனூர் இறைவர் | கற்பகநாயகி |
| 61. | திருக்கடம்பந்துறை | கடம்பவனநாதர் | முற்றிலாமுலையம்மை |
| 62. | திருக்கடம்பூர் (கடம்பர் கோயில்) | அமிர்தகடேசுவரர் | சோதிமின்னம்மை |
| 63. | திருக்கடவூர் | அமிர்தகடேசுவரர் | அபிராமியம்மை |
| 64. | திருக்கடவூர் மயானம் | பிரம்மபுரீசுவரர் | மலர்க்குழல் மின்னம்மை |
| 65. | திருக்கடிக்குளம் | கற்பகஈசுவரர் | சுந்தரநாயகி |
| 66. | திருக்காடுவாய்க்கரைப்புத்தூர் (ஆண்டார் கோயில்) | பொன்நகர் இறைவர் | சிவாம்பிகை |

| வ. எண் | தலத்தின் பெயர் | இறைவன் பெயர் | இறைவி பெயர் |
|---|---|---|---|
| 67. | திருக்கடைமுடி | கடைமுடிநாதர் | அபிராமியம்மை |
| 68. | திருக்கண்டியூர் | வீரட்டர் | மங்களநாயகி |
| 69. | திருக்கண்ணார்கோயில் | கண்ணாயிரநாதர் | முருகுவளர்கோதை |
| 70. | திருக்கயிலாயம் | கயிலாயநாதர் | மலைமகள் |
| 71. | திருக்கரவீரம்(கரையபுரம்) | கரவீரேசுவரர் | பிரத்தியட்சமின்னம்மை |
| 72. | திருக்கருகாவூர்(திருக்களாவூர்) | முல்லைவனேசுவரர் | சுரும்பனையாள் அம்மை |
| 73. | திருக்கருக்குடி (மருதாந்தநல்லூர்) | கருக்குடியப்பர் | அழகொளிமின்னம்மை |
| 74. | திருக்கருப்பறியலூர் | குற்றம்பொறுத்தநாதர் | கோல்வளையம்மை |
| 75. | திருக்கருவிலி | நற்குணநாதர் | அனைத்தழகம்மை |
| 76. | திருக்கருவூர் - ஆனிலை | பசுபதீசுவரர் | அருள்வடிவம்மை |
| 77. | திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை) | அமிர்தகலயநாதர் | அமிர்தவல்லியம்மை |
| 78. | திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை) | அழகப்பர் | அழகம்மை |
| 79. | திருக்கலிப்பாலை | பால்வண்ணநாதர் | வேதநாயகி |
| 80. | திருக்கழுக்குன்றம் | மலைமருந்துஈசர் | பெண்ணினல்லாளம்மை |
| 81. | திருக்களர் | களர்முளைநாதர் | அழகம்மை |
| 82. | திருக்கள்ளில் | சிவானந்தநாதர் | ஆனந்தவல்லியம்மை |
| 83. | திருக்கற்குடி (உய்யக்கொண்டான்) | விழுமியார் | மையார்கண்ணியம்மை |
| 84. | திருக்கன்றாப்பூர் | நடுதறியப்பர் | மாதுமையம்மை |
| 85. | திருக்காட்டுப்பள்ளி-கீழை | ஆரணியவிடங்கர் | அகிலாண்டநாயகி |
| 86. | திருக்காட்டுப்பள்ளி - மேலை | தீயாடிப்பர் | வார்கொண்டமுலையம்மை |
| 87. | திருக்காவிரிப்பூம்பட்டினம் | பல்லவனீச்சுரர் | சுந்தரநாயகி |
| 88. | திருக்காளத்தி | காளத்திநாதர் | ஞானப்பூங்கோதை |
| 89. | திருக்காறாயில் | கண்ணாயிரநாதர் | கயிலாயநாயகி |
| 90. | திருக்கானப்பேர் (காளையார்கோயில்) | காளையார் | பொற்கொடியம்மை |
| 91. | திருக்கானாட்டு முள்ளூர் | பதஞ்சலிநாதர் | கானார்குழலி |
| 92. | திருக்கானூர் | செம்மேனிநாதர் | சிவயோகநாயகி |
| 93. | திருக்கீழ்வேளூர் | கேடிலியப்பர் | வனமுலையம்மை |
| 94. | திருக்குடந்தைக்காரோணம் | காசிவிசுவநாதர் (சோமநாதர்) | காசிவிசாலாட்சி |
| 95. | திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் | நாகேசுவரர் | பெரியநாயகி |
| 96. | திருக்குடமூக்கு(கும்பகோணம்) | கும்பேசுவரர் | மங்களநாயகி |
| 97. | திருக்குடவாயில் | கோணேசுவரர் | பெரியநாயகி |
| 98. | திருக்குரக்குக்கா | குந்தளேசுவரர் | குந்தளநாயகி |
| 99. | திருக்குரங்கணில்முட்டம் | வாலீசுரர் | இறையார்வளையம்மை |
| 100. | திருக்குரங்காடுதுறை-வட | குலைவணங்குநாதர் | அழகுசடைமுடியம்மை |
| 101. | திருக்குரங்காடுதுறை-தென் | இடர்த்துணைநாதர் | பவளக்கொடியம்மை |
| 102. | திருக்குருகாவூர். | வெள்ளடையப்பர் | காவியங்கண்ணி |
| 103. | திருக்குறுக்கை | வீரேட்டேசுவரர் | ஞானாம்பிகை |
| 104. | திருக்குற்றாலம் | குறும்பலநாதர் | குழல்வாய்மொழியம்மை |
| 105. | திருக்கூடலையாற்றூர் | நெறிகாட்டுநாயகர் | புரிகுழலாம்பிகை |
| 106. | திருக்கேதாரம் | கேதாரநாதர் | கேதாரகௌரியம்மை |
| 107. | திருக்கேதீச்சரம் | கேதீச்சுரர் | கௌரியம்மை |
| 108. | திருக்கைச்சினம் | கைச்சினநாதர் | வெள்ளையம்மை |
| 109. | திருக்கொடிமாடச்செங்குன்றூர் | மாதியலும் பாதியர் | பாகம்பிரியாளம்மை |
| 110. | திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) | கொடுங்குன்றீசுவரர் | குயில் அமிர்தவல்லி |
| 111. | திருக்கொட்டையூர் | கோடீசுவரர் | பந்தாடுநாயகியம்மை |

| வ. எண் | தலத்தின் பெயர் | இறைவன் பெயர் | இறைவி பெயர் |
|---|---|---|---|
| 112. | திருக்கொண்டீச்சுரம் | பசுபதீசுவரர் | சாந்தநாயகி |
| 113. | திருக்கொள்ளம்பூதூர் | வில்வவனேசுவரர் | சுந்தராம்பிகை |
| 114. | திருக்கொள்ளிக்காடு | கொள்ளிக்காடர் | பஞ்சினும்மெல்லடியம்மை |
| 115. | திருக்கோகர்ணம் | மகாபலநாதர் | கோகர்ணநாயகி |
| 116. | திருக்கோடி | அமிர்தகடேசுவரர் | மையார்தடங்கண்ணி |
| 117. | திருக்கோடிகா | கோடிகாவுடையகோ | வடிவம்மை |
| 118. | திருக்கோட்டாறு | ஐராவதேசுவரர் | வண்டமர்பூங்குழலம்மை |
| 119. | திருக்கோட்டூர் | கொழுந்தீசுவரர் | தேன்மொழியம்மை |
| 120. | திருக்கோணமலை | கோணேசுவரர் | மாதுமையாளம்மை |
| 121. | திருக்கோயில் (சிதம்பரம்) | சபாநாயகர் | சிவகாமியம்மை |
| 122. | திருக்கோலக்கா | திருத்தாளம் தந்தார் | ஓசைகொடுத்தநாயகி |
| 123. | திருக்கோவலூர் | வீரட்டேசுவரர் | சிவானந்தவல்லி |
| 124. | திருக்கோழம்பம் | குயிலிறைநாதர் | சுந்தரநாயகி |
| 125. | திருக்கோளிலி | கோளிலிநாதர் | வண்டமர்பூங்கழலம்மை |
| 126. | திருக்கச்சரப்பள்ளி | ஆலையந்துறையப்பர் | அல்லியங்கோதை |
| 127. | திருச்சத்திமுற்றம் | சிவக்கொழுந்தீசர் | பெரியநாயகி |
| 128. | திருச்சாத்தமங்கை | அயவந்தீசுவரர் | மலர்க்கண்ணம்மை |
| 129. | திருச்சாய்க்காடு (சாயாவனம்) | வெண்ணெய்ப்பிரான் | வேல்நெடுங்கண்ணியம்மை |
| 130. | திருச்சிரப்பள்ளி | தாயுமானவர் | மட்டுவார் குழலம்மை |
| 131 | திருச்சிவபுரம் | சிவபுரநாதர் | அழகுக் கொடியம்மை |
| 132. | திருச்சிறுகுடி | மங்களேசுவரர் | மங்களநாயகி |
| 133. | திருச்சிற்றேமம் (சிற்றாம்பூர்) | பொன்வைத்தநாதர் | அகிலாண்டநாயகி |
| 134. | திருச்சிறுகுடி | மங்களேசுவரர் | மங்களநாயகி |
| 135. | திருச்சிகாழி | பிரமபுரீசுவரர் | திருநிலைநாயகி |
| 136. | திருச்சுழியல் | திருமேனிநாதர் | துணைமாலையம்மை |
| 137. | திருச்செங்காட்டங்குடி | கணபதீச்சுரர் | திருக்குழல்நாயகி |
| 138. | திருச்செம்பொன்பள்ளி | செம்பொன்பள்ளியார் | மருவார்குழலி |
| 139. | திருச்சேய்ஞலூர் | சேய்ஞலூர் மேயார் | தோழியம்மை |
| 140. | திருச்சேறை (உடையார்கோயில்) | செந்நெறியப்பர் | ஞானவல்லி |
| 141. | திருச்சோபுரம் | சோபுரநாதர் | சோபுரநாயகி |
| 142. | திருச்சோற்றுத்துறை | சொன்னவாறறிவார் | ஒப்பிலா அம்மை |
| 143. | திருத்தண்டலைநீணெறி | நீள்நெறிநாதர் | ஞானாம்பிகை |
| 144. | தருமபுரம் | யாழ்மூரிநாதர் | தேனமிர்தவல்லி |
| 145. | திருத்தலைச்சங்காடு | சங்குஅருள்நாதர் | சுந்தரநாயகி |
| 146. | திருத்தலையாலங்காடு | ஆடல்வல்லார் | திருமடந்தையம்மை |
| 147. | திருந்துதேவன்குடி | தேவன்குடிச் செல்வர் | அருமருந்தம்மை |
| 148. | திருத்திலதைப்பதி | மதிமுத்தேசர் | பொற்கொடியம்மை |
| 149. | திருத்தினைநகர் (தீர்த்தனகிரி) | சிவக்கொழுந்தீசுவரர் | ஒப்பிலாநாயகி |
| 150. | திருத்துருத்தி (குத்தாலம்) | துருத்தியப்பர் | முகிலாம்பிகை |
| 151. | திருத்துறையூர் | பசுபதீசுவரர் | பூங்கோதைநாயகி |

(அடுத்த இதழில் நிறைவுபெறும்)

**ஆயிரம் திருநாமங்கள்**

''ஆயிரம் பேருகந்தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே''
- திருநாவுக்கரசர்

# கந்தர் அலங்காரத்தில் சமுதாய இயல்

முனைவர் மா.வண்ணமுத்து
தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருளை முழுமையாகப் பெற்றவர் அருணகிரிநாத சுவாமிகள். வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களை அடைந்து, இனிமேல் வாழவேண்டாம் என்று திருவருணையின் கோபுர உச்சியிலிருந்து கீழே குதிக்கின்றார். குதித்த அவரை இரண்டு கைகள் தாங்கின. முருகப்பெருமான் அவரைக் கீழே விழாது தடுத்தாட்கொண்டார். தடுத்தாட்கொண்டதோடு, தம்முடைய புகழைப் பாடும்படி பணித்தார். திகைத்து நின்ற அருணகிரியாருக்கு, முருகனே முத்து என்ற சொல்லை முதற்சொல்லாக எடுத்துக்கொடுத்தார்.

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

என்று அருணகிரியார்கடல்மடை திறந்ததைப் போன்று பாடத் தொடங்குகின்றார். இவ்வாறு பாடத் தொடங்கிய அருணகிரியார், முருகப்பெருமான்மீது பாடிய அருமையான நூல்தான் கந்தர் அலங்காரமாகும். கந்தர் அலங்காரத்தில், சமுதாயநன்மை கருதி ஒருவர் எவ்வாறு வாழவேண்டும் என்னும் உணர்வை அருணகிரியார் சுட்டிக்காட்டுவதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பசி என்னும் பிணி

ஏனைய அருளாளர் பாடல்களுக்கும், அருணகிரிநாதசுவாமிகளின் பாடல்களுக்கும் வேற்றுமை உண்டு. இராமலிங்க சுவாமிகள் தம்முடைய அருட்பாவில், பக்தி உணர்வைப் புலப்படுத்துவதோடு, சமுதாய உணர்வுச் சிந்தனைகளுள் தலையாயது, பசித்தவர் முகம் பார்த்து இரங்கவேண்டும் என்னும் பண்பாகும். பசி என்னும் பிணி ஒழிக்கப்படவேண்டும் என்னும் உணர்வோடு, அருட்பிரகாச இராமலிங்க சுவாமிகள் வடலூரில் ஏற்றிவைத்த அடுப்பு இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது.

உடம்பில் உயிர்தங்கியிருக்கவேண்டுமானால், உடம்பைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும். எனவேதான், திருமூலரும், ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்று குறிப்பிடுகின்றார். மணிமேகலை பாடிய சீத்தலைச்சாத்தனாரும்'' உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'' என்று குறிப்பிடுவது கருதத்தக்கதாகும். மக்களின் பசித்துன்பத்தைப் போக்க முனைந்த தமிழக மன்னன் ஒருவன் பசிப்பிணி மருத்துவன் என்றே அழைக்கப்பட்டான். இத்தகு கொடுமையான பசி என்னும் நோய் பற்றிய சிந்தனையைப் பக்திஉணர்வைப் புலப்படுத்தும் கந்தர்அலங்காரத்தில், அருணகிரிநாத சுவாமிகள் சுட்டிக்காட்டுவது அறிந்து மகிழ்வதற்குரியதாகும். அவருடைய சமுதாயவியல் சிந்தனை போற்றுவதற்குரியதாகும்.

## நன்மை பயக்கும் நான்குநெறிகள்

இறைவனாகிய முருகப் பெருமானை அடைவதற்கு நான்கு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும்படி அருணகிரியார் அறிவுறுத்துகின்றார். அங்கும், இங்கும் அலையவிடாது மனத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும். கோபத்தை அறவே விட்டுவிடவேண்டும். எப்பொழுதும் ஏழைகளுக்குத் தானம் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும். தாமசம், ராஜசம் என்னும் குணங்களால் பீடிக்கப்படாது சுத்தநிலையாய், இயற்கையாய்உள்ள சாத்துவிக குணத்துடன் இருக்கவேண்டும். இவ்வாறு இருப்பவர்களுக்குச் சூரனை வென்ற வீரனாகிய முருகப்பெருமான் காட்சி நல்கி அருள் புரிவான்.

''தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத்
தானம்என்றும்
இடுங்கோள் இருந்தபடி இருங்கோள்
எழுபாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்திறக்கத்
தொளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தாமே
உமக்கு வெளிப்படுமே''

என்பது கந்தரலங்காரம் 16 ஆவது பாடலாகும். இப்பாடலில் மனத்தைக் கட்டுப்படுத்தக் கூறுவதும், இருந்தபடி இருக்கக்கூறுவதும் பக்திஉணர்வோடு தொடர்புடையவன் வெகுளியாகிய கோபத்தைத்

நீக்கக் கூறுவதும், ஏழைகட்குத்தானம் இடக்கூறுவதும் அருணகிரியாரின் சமுதாயவியல் சிந்தனையைப் புலப்படுத்துவனவாகும்.

நம்முடைய பிறவிக்கு நாம் செய்கின்ற வினைகள் காரணமாக அமைகின்றன. தீவினைக்குக் கோபம் காரணமாக அமைகின்றது. கோபம் குறைகின்றபொழுது - நீங்குகின்றபோது நமக்குப் பிறவி இல்லாமல்போவதற்கும் வாய்ப்பு உண்டு. கோபத்தை நீக்கி, எப்பொழுதும் இனியமொழி பேசுகின்ற தம்முடைய அன்பர்களை, முருகப்பெருமான் இளமையுடையவராகக் காத்து, மீண்டும், இன்னொரு தாயின் கருவில் பிறவாமலும் காத்தருளுவான் என்பது அருணகிரியார் வாக்காகும். இக்கூற்றை, ''மதிதனை இலாதபாவி'' என்று தொடங்கும் திருப்புகழில்,

'' இனியசொல் மறாத சீலர் கருவழி
வாராமல் நாளும்
இளமையது தானுமாக நினைவோனே''

என்று அருணகிரியார் புலப்படுத்துகின்றார்.

எனவே, கந்தரலங்காரத்தில் ''விடுங்கோள் வெகுளியை'' என்று அருணகிரியார் குறிப்பிடும் கூற்றை நாம் கடைப்பிடிப்போமானால், நம்முடைய பிறவியை நாம் அறுக்கலாம் என்பது உறுதியாகும்.

### உலகிற்குக் கொடுத்து உண்ணவேண்டும்

இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுவதே ஈகை எனப்படும். இக்கருத்தையே வள்ளுவர், ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்று சுட்டுகின்றார். ''கதிர்வேலனை வாழ்த்தி, நொய் அளவில் பாதி அளவாவது இல்லாதவர்கட்கு உதவுங்கள்' என்று உலகுக்கு அறிவுரை கூறும் அருணகிரியார். ஒருசிறிதும் வாராது என்று அறிவுறுத்துகின்றார். நிழலுக்கு ஒதுங்குவதற்குக்கூட உங்கள் உடம்பு பயன் படாததுபோல, உங்கள் செல்வமும் இறுதிப்பயணத்தில் உங்கட்குப் பயன்படாது'' என்பதும் அருணகிரியாரின் எச்சரிக்கையாகும். ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'' என்னும் பட்டினத்தடிகள் கருத்தையே, அருணகிரிநாத சுவாமிகள்.

''வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிள அளவேனும் பகிர்மின்கள்
உங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின்
வெறுநிழல்போல்
கையிற் பொருளும் உதவாது காணும்
கடைவழிக்கே''

என்று குறிப்பிடுகின்றார். இப்பாடல் கந்தரலங்காரம் 18 ஆவது பாடலாகும்.

தான் தேடிய பொருளைப் பிறருக்காகப் பயன் படுத்தாமலும், தனக்காகவும் பயன்படுத்தாமலும் வாழுகின்ற தன்மையுடைவர்களை, மதியற்றவர்கள் என்று வசைபாடும் அருணகிரியார், செல்வத்தை ஆழப்புதைத்துவைக்கும் அவர்கள் இழிநிலையையும் சுட்டிக்காட்டி, அச்செல்வம் உங்களோடு வருமா? என்ற வினாவையும் எழுப்புகின்றார். நீங்கள் பொருளைச் சேர்த்தாலும், உங்கள் தீவினை அப்பொருளை உங்கட்குப் பயன்படாமல் செய்துவிடும் என்று விளக்குகின்றார்.

''கோழிக் கொடியன் அடிபணியாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள் உங்கள்
வல்வினைநோய்
ஊழிற்பெருவலி உண்ணவொட்டாது
உங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ
நும் அடிப்பிறகே''

என்பது கந்தரலங்காரம் 20-ஆவது பாடலாகும்.

### நிலையாமையை உணர்ந்து வாழவேண்டும்

நிலையில்லாத செல்வத்தை நிலையுடையது என்று எண்ணி ஏமாற்றம் அடையக்கூடாது என்ற உண்மையை அருணகிரியார் மூன்று பாடல்களில் நயமாகச் சிந்திக்கின்றார். ''சுழித்துக்கொண்டு ஓடுகின்ற ஆற்றினது வெள்ளம் போன்றது செல்வம்'' என்று செல்வத்தினது நிலையில்லாத தன்மையைக் கூறி, திருச்செங்கோட்டுவேலனது வேலாயுதத்தை நினைத்து உருகும்படி உலகிற்கு அறிவுரை வழங்குகின்றார் அருணகிரியார்.

''சுழித்தோடு ஆற்றில் பெருக்கானது செல்வம்
துன்பம் இன்பம்
கழித்தோடு கின்றது எக்காலம் நெஞ்சே
கரிக்கோட்டு முத்தைக்
கொழித்தோடி காவிரிச் செங்கோடன் என்கிலை
குன்றம் எட்டும்
கிழித்தோடும் வேல் என்கிலை எங்ஙனே
முத்தி கிட்டுவதே''

என்பது கந்தரலங்காரம் 36 ஆவது பாடலாகும். கந்தரலங்காரம் 49 ஆவது பாடலிலும் செல்வத்தின் நிலையாமைத்தன்மைபற்றி அருணகிரிநாதசுவாமிகள் அறிவுறுத்துகின்றார். தேரின்மீதும், யானையின்மீதும் உலவும் செல்வம் எல்லாம் நீரின்மேல் எழுதிய எழுத்துப்போன்று நிலையற்றது என்று குறிப்பிடும் அருணகிரியார், உண்மையான செல்வம் எது என்றால், முருகப்பெருமானின் அடியார்களின் நட்பேயாகும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

''சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன்
தொண்டர்குழாம்
சாரில் கதியின்றி வேறிலை காண் தண்டு
தாவடி போய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வம்
எல்லாம்
நீரில் பொறியென்று அறியாத பாவி
நெடு நெஞ்சகமே''

என்பது பாடலாகும்.

கந்தரலங்காரம் 66 ஆவது பாடலில், யாக்கையின் நிலையில்லாத தன்மையை மொழிந்து, செல்வம் மின்னலைப் போன்று தோன்றிமறைவதையும் உணர்த்தி, பசித்தவர்க்கு உதவவேண்டும் என்று அருணகிரியார் வலியுறுத்திக் கூறுகின்றார். எல்லா உயிர்களிலும் முருகன் குடிகொண்டிருக்கின்றான். பசித்தவர் உயிரிலும் அவன் இருக்கின்றான். எனவே பசித்தவர்களுக்கு உதவாதவர்கள், முருகனிடம் அன்பு இல்லாதவர்கள் என்பது அருணகிரியாரின் நயவுரையாகும். மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு என்னும் உண்மையை,

''நீர்க் குமிழுக்கு நிகரென்பர் யாக்கை
நில்லாது செல்வம்
பார்க்கும் இடத்து அந்த மின்போலும்
என்பர் பசித்து வந்தே
ஏற்கும் அவர்க்கு இட என்னின்
எங்கேனும் எழுந்திருப்பார்
வேற்குமரற்கு அன்பிலாதவர் ஞானம்
மிகவும் நன்றே''

என்னும் பாடலில் அருணகிரியார் அறிவுறுத்துகின்றார். தன்னை நெருங்கிவரும் வறியவர்களைக் கண்டும் காணாது இருக்கும் போலி அடியவர்களை, அருணகிரியார் இப்பாடலில் எள்ளிநகையாடுகின்றார் எனலாம்.

### தருமம் தலைகாக்கும்

தன்னிடம் பொருள்பெற வந்த வறியவர்களுக்கு, ஒருவர் பொருள் கொடுத்துக் காப்பாற்றுவாரேயானால், அவர் செய்த தருமம் தக்கநேரத்தில் அவரைக் காப்பாற்றும் என்றும் அருணகிரியார் சமுதாய மக்களுக்கு அறிவுரை வழங்குகின்றார். ஒருவருடைய பொன்னும், பொருளும், வீடும், மடந்தையரும், அவருடைய உயிர்போனபின்பு உடன் வரமாட்டா. ஆனால் இல்லை என்று வந்தவர்களுக்கு அவர் இட்டதருமம் அவருடன் வந்து அவரைக் காப்பாற்றும். இக்கருத்து அமைந்த பாடலே கந்தர் அலங்காரம் 59 ஆவது பாடலாகும்.

''பொங்கார வேலைவிட்டோன்றன்
அருள்போல் உதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது
இடாமல் வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார வீடு மடந்தையரும்
சங்காதமோ கெடுவீர் உயிர்போம்
அத்தனிவழிக்கே''

இப்பாடலில் பயின்றுவரும் ''எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது'' என்பது இம்மை மறுமை என்ற இரண்டு நிலைகளுக்கும் பொருந்தும் எனலாம்.

### சோறு கொடுக்க வேண்டும்

பசித்துன்பத்தை நன்கு உணர்ந்தவர் அருணகிரியார். அதனை அவருடைய பலபாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. நம்மை நாடி வருபவர்கட்குப் பொருள்கொடுப்பதினும், உணவுகொடுப்பது சாலச் சிறந்தது என்னும் கருத்தை உடையவர் அருணகிரியார். கிரௌஞ்சக்கிரியை வீழ்ச்சியடையச் செய்த வேலனை வணங்கி மாதவம் செய்யும் உலகோருக்கு அருணகிரியார் ஆலோசனை ஒன்று நல்குகின்றார். ''உங்களை நாடிவந்தவர்களுக்குப் பச்சை இலைக்கறியாயினும் அல்லது வெந்தஉணவு எதுவாயினும் பங்கிட்டுக்கொடுங்கள், அச்செயலானது உங்களது இறுதிவழியில் கட்டுச்சோறு போன்று பயன்படும்'' என்பதே அவருடைய அறிவுரையாகும்.

பசித்தவருக்கு உணவிடுதல் நம்முடைய மறுமைக்குப் பயன்படும் என்னும் கருத்தையே,

''மலையொரு கூறெழ வேல்வாங்கினானை
வணங்கிய பின்
நிலையான மாதவம் செய்குமினோ
நும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதிசோறும்
உற்றதுணையும் கண்டீர்
இலையாயினும் வெந்தது ஏதாயினும் பகிர்ந்து
ஏற்றவர்க்கே''

என்று கந்தரலங்காரம் 51 ஆவது பாடலில் அருணகிரியார் சுட்டுகின்றார்.

**ஈயார் தேட்டைத்தீயார் கொள்வார்**

பாடுபட்டுப் பணத்தைத் தேடி, அதைப் புதைத்து வைப்பவர்களைக் கேடுகெட்ட மானிடர் என்று ஔவையார் வெறுத்து மொழிவார். இருக்கும் பொழுது இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவாத வர்கள் அடையும் இழிநிலையை அருணகிரியாரும் சுட்டிக்காட்டுகின்றார். ''வள்ளியம்மையாரின் தனங் களை விரும்புகின்ற முருகக்கடவுளை, உண்மையான அன்பினால், உள்ளம் உருகிப் பாடித்துதித்துக்கையில் பொருள் இருக்கும் பொழுதே ஏழைகட்கும், சிவ புண்ணியச் செல்வர்கட்கும் கொடுக்காதவர்கள். பாவ வழியில் பொருளை ஈட்டித்தானும் அனுபவிக்காமல், பிறரையும் அனுபவிக்கவிடாமல் மண்ணில் புதைத்து வைத்துத் திருடர்களுக்கு கொடுத்து, அதனால் உள்ளம் திகைப்புற்று உடல்மெலிந்து, மனம்வாட்டமுற்று மிகவும் துக்கப்பட்டுத்தமது வாழ்நாளைப் பயனின்றிக் கழிக்கின்றவர்கள் ஆவர்'' என்பது அருணகிரியார் கருத்தாகும். இக்கருத்தை விளக்குவதே.

''வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை
மெய்யன்பினால்
பாடிக் கசிந்து உள்ளபோதே கொடாதவர்
பாதகத்தால்
தேடிப்புதைத்துத் திருட்டில் கொடுத்துத்
திகைத்து இளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு
மாய்ப்பவரே''

என்னும் கந்தரலங்காரம் 53 ஆவது பாடலாகும்.

**பிறவிப்பயன் ஈதலே ஆதல் வேண்டும்**

ஏழைகட்குக் கொடுத்து வாழவேண்டும் என்னும் உணர்வை, வாய்ப்புகிட்டும் பொழு தெல்லாம் அருணகிரியார் சுட்டிக்காட்டுகின்றார். பிறவிப்பயன் ஆவது இல்லாதவர்களுக்குக் கொடுத்து வாழும் தன்மையில் அமையவேண்டும் என்பதே அருணகிரியாரின் எண்ணமாகும். ஒவ்வொருவரும் இத்தகு எண்ணத்தோடு வாழவேண்டும் என்பதே அவருடைய விருப்பமாகும். இந்த விருப்பத்தைத் தம்மேல் ஏற்றி, முருகப்பெருமானிடம் ஒரு விண் ணப்பமாக அவர் விண்ணப்பிக்கின்றார். ''இராம பிரானின் திருமருகரே, மயிலை வாகனமாக உடைய வரே, இறப்பதற்கும் மீண்டும் பிறப்பதற்கும் அல்லா மல், வறுமைப்பிணியால் தளர்ச்சி அடைந்தவர்கட்கு, ஒருபொருளைக் கொடுத்து உதவி செய்தற்கு அடி யேனை உருவாக்கினாயில்லேயே'' என்று நெக்குருகி வேண்டுகின்றார். அருணகிரியாரின் வேண்டுதலை விளக்குவதே.

''சாகைக்கும் மீண்டும் பிறக்கைக்கும் அன்றித்
தளர்ந்தவர்க்கு ஏன்று
ஈகைக்கு எனை விதித்தாயிலையே
இலங்காபுரிக்குப்
போகைக்கு நீ வழி காட்டென்று போய்
அக்கடல் தீக்கொளுத்த
வாகைச் சிலை வளைத்தோன் மருகா
மயில் வாகனனே''

என்னும் கந்தரலங்காரம் 54 ஆவது பாடலாகும்.

**முடிவுரை**

தம்முடைய பிறவி, தானம் செய்வதற்கே என்று வாழ்ந்த பல சான்றோர்கள், அவர்கள் செயலால் இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மகா பாரதத்தில், தன்னுடைய உயிர்போகும் நிலையில், போர்க்களத்தில் கண்ணபிரானின் அருளைப் பெறு கிறான் கர்ணன். உனக்கு என்ன வரம்வேண்டும் என்று கர்ணனிடம் பரமாத்மா வேண்டுகிறார். அதற்குக் கர்ணன், ஏழேழ்பிறவியிலும், ''இல்லை என்று வருப வருக்கு இல்லை என்று கூறாமல் உள்ளம வேண்டும்'' என்று வேண்டுகிறான். அறுபத்து மூன்று நாயன் மார்களுள், தம்மை நாடிவந்த சிவனடியார்களுக்கு இல்லை என்று கூறாத வாழ்ந்த பெருந்தகையாளர் இயற்பகை நாயனார். இத்தகுமுறையில் இல்லை என்று கூறாத அருள் நெஞ்சத்தைத் தமிழ்ச் சமுதாயம் பெறவேண்டும் என்பதே அருணகிரிநாத சுவாமிகளின் எண்ணமும், விருப்பமும் ஆகும்.

★★★

**தீது புரியாத தெய்வமே**

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக் கிரங்கி
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு

– சிதம்பரசுவாமிகள்

# கம்பனும் திருமுறைகளும் – திருக்கோவையார்

— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

மணிவாசகப் பெருமான் திருவாசகம் பாடி முடித்தபின் ''பாவை பாடியவாயால் கோவை பாடுக'' என தில்லை நாயகரான நடராசப் பெருமான் உத்தர விட்டார். திருவாசகத்தைத் தம் திருக்கரத்தினால் எழுதியனுபவித்த எம்பெருமான் அழகியநூல் ஒன்றை அதே அடியாரிடம் கேட்டு மகிழ எண்ணி, அப்படி உத்தரவிட்டார்போலும்.

திருக்கோவையாரை வேதத்தின் சாரமென் றும், ஆகமநூல் என்றும், அழகிய காம நாடகம் என்றும் அழகிய இலக்கணநூல் என்றும் யார் யார் எந்தக்கண் கொண்டுநோக்கினாலும் அது அப்படியே காட்டும் என்பர் புலவர்.

ஒரு ஆடவன் ஒரு பெண்ணுடன் புறப்பட்டுத் தன் ஊர் நோக்கிவருகிறான். தன் அருமைக்காதலியின் அழகிய கால்கள் நோகுமே எனக்கவலைப்படுகிறான். அந்தப்பெண்ணின் தோழி ''உம்முடன் வந்தால் என் தலைவிக்கு கல்நிறைந்தகாடுகூட குளிர்ந்த மருதநில மும் பொய்கையும் போலிருக்கும்'' என்கிறார் (திருக் கோவையார். 202)

என் தலைவியின் திருவடிகள் மிகவும் மென்மையானவை. பஞ்சில் நடந்தால் வருந்து பவை. (கம்பன் பஞ்செனச்சிவக்குமென்கால்தேவி என்பார்) எனினும் உம்முடன் வந்தால் கொடிய காடுகூட மென்மையாகத் தோன்றும் என்கிறார். (திருக். 209)

சீதாபிராட்டியிடம் இராமபிரான் காடுசெல்ல விரும்பும்போது ''காடு செல்வது துன்பமான ஒரு அனுபவம். உன் திருவடிகள் அத்தகைய துன்பத்தைத் தாங்காது'' என்றபோது, திருக்கோவையாரின், மேற் கூறியுள்ள பெண்ணைப்போல, ''பரிவில்லாத மனத் துடன் என்மீது பற்றில்லாமல் என்னை நீங்க எண்ணு கின்றீர். உம்மைப் பிரிந்து தனியாக இங்குவாழும் துன்பமான வெப்பத்தைக் காட்டிலும் காடுசுடுமோ?'' எனக் கேட்கிறாள் சீதாபிராட்டி இராமபிரானிடம்.

பரிவிகந்த மனத்தொடு பற்றிலாது
ஒருவுகின்றனை ஊழி அருக்கனும்
எரியுமென்பது ஊழி அருக்கனும்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள்

கணவனுடன் நடந்து சென்ற தன் மகளைத் தேடி ஒரு செவிலித்தாய் சென்றாள். ''அழகிய படுக் கையை மிதித்தால் கூட நடுங்கும் என்மகள் பரல்கற்கள் நிறைந்த காட்டிலோ நடந்து செல்வாள்?'' என இரங்கு கின்றாள். (திருக்கோவையார் - 239)

காட்டில் இலக்குவன் குடிசை கட்டுகிறான். அது கண்டுஇராமபிரான் ''மண்வழிநடந்தறியாச் சீதையின் மலர்போன்ற பாதங்கள் காட்டில் நடக்கின் றன. இளவரசனான என் தம்பியின் கைகள் பர்ணசாலை கட்டுகின்றன. இல்லாமை வந்துவிட்டால் எல்லாருக் கும் எல்லாத் தொழிலும் செய்யத் தானாகவே இயலும் போலும்!'' என்கிறார்.

மேவு கானம் மிதிலையர் கோன் மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன!
தாவின் எம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலர்க்கியை யாதவே.

தன்மகள் நடக்கமுடியாது வருந்துவாரே எனத் தாய் வருந்துவதுபோல, தன்மனைவி காட்டில் நடப்பது கண்டு இராமபிரான் வருந்திய செய்தி திருக்கோவை யாரின் கருத்தை ஒத்துவருகிறது.

தாயொருத்தி தனது மகளையும் மருமகனை யும் தேடிக்கொண்டு காடு வழிநடக்கும்போது, கண வன் மனைவியாக எதிரில் வந்த இருவரிடம் ''என் மகளும் மருமகனும் வருகின்றார்களோ என எண்ணி னேன். உங்கள் மாதிரி கணவன் மனைவியாகப்போன ஒரு தம்பதிகளை எதிரில் கண்டீர்களா?'' எனக் கேட்டாள் தாய். அந்த ஆண்மகன் ''அம்மையே! ஆண்சிங்கம் போன்ற ஆடவன் ஒருவனை எதிரில் கண்டேன்'' எனப்பதில் கூறிவிட்டு, தன்மனைவியை நோக்கி, ''அவனுக்குப்பக்கத்தில் .... நீ அந்த அம்மை யிடம் அதுபற்றிச் சொல்லுவாயாக?'' என்றான். தன் எதிரில் நின்ற ஆண்மகனுக்குப் பக்கலில் நின்ற பெண்ணைக் கூட அவன் ஏறிட்டுக் காணவில்லை! பிறர்மனை நோக்காப் பேராண்மைக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது திருக்கோவையாரின் இப் பாடல்.

மீண்டார் என உவந்தேன் கண்டு நும்மை.
இம்மேதகவே
பூண்டார் இருவர் முன் போயினரே! புலியூர்
எனை நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக்
கண்டேன். அயலே
தூண்டாவிளக்கனையாய் என்னையோ
அன்னை சொல்லியதே.

இராமகாதை பிறர் மனைநோக்காப் பேராண்மை, ஏகதார விரதம் முதலானவற்றை வலியுறுத்தும். இராமபிரானை முதனூல் முனிவரான வான்மீகர் (பரதார சகோதரன்) பிறர்மனைவியருக்கு உடன் பிறப்புப் போன்றவன் என்றார்.

கம்பரது இராமாயணத்தில், காட்டில் குகனும் பரதனும் பேசும்போது இராமலட்சுமணர் உறங்கிய இடத்தைக்காட்டுகிறார் குகப்பெருமான். ''கூடவந்து இலக்குவன் எங்கே படுத்திருந்தார்?'' எனப்பரதன் கேட்க, குகன் அழகே உருவான இராமனும் அவளும் துயில, இலக்குவன் வில்லையூன்றிய கையுடன் பொழுது விடியும் மட்டும் கையிலே வில்லைத் தாங்கி, நின்று காவல்காத்தார்'' எனப்பதில்கூறினார் குகப் பெருமான். ''அழகன்'' என இராமபிரானைக் குறித்த குகப்பெருமான் சீதாபிராட்டியை ''அழகி'' எனக் கூறாமல் அவள் எனக்கூறி, பிராட்டியை நிமிர்ந்து பாராத உயர்ந்த நிலையைக் காட்டியருளினார் கம்பர்.

வான்மீகரின் முதல் நூலிலே இதே அழகைக் காணலாம். சீதையான தன் அண்ணியை நிமிர்ந்து நோக்காத உத்தமன் இலக்குவன் என்பது முதல் நூல் முனிவர் காட்டும் காட்சி.

இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்து செல்லும்போது, அவ்வம்மை தன் உடலிலிருந்த நகைகள் சிலவற்றைக் கழற்றி ஏறிந்துகொண்டே சென்றாள். சீதாபிராட்டியைத் தேடிவந்த இராம லட்சுமணர்கள் அனுமான்மூலமாக குரங்கரசனான சுக்ரீவனிடம் நட்பு பூண்டனர். அப்போது சுக்ரீவன் இராமபிரானிடம் சில நகைகளையளிக்க அவை சீதா பிராட்டியினுடையவை என இராமபிரான் அறிந்து கொண்டு, அவளை எடுத்துச் சென்ற அரக்கன் தென் திசைநோக்கிச் சென்றுள்ளான் என அறிந்துகொண்டார். அப்போது அந்நகைகளை இராமபிரான் இலக்குவனிடம் காட்டி ''இவைகள் சீதாபிராட்டியினுடையவைதானா?'' எனக் கேட்க இலக்குவன் ''சீதாபிராட்டியின் கைகளில் உள்ள அணிகளையும் காது குண்டலங்களையும் கண்டதில்லை. அனுதினமும் உங்கள் இருவரையும் வணங்கும்போது அம்மையின் திருவடிகளில் உள்ள சிலம்புகளைக் கண்டுள்ளேன். இவைகள்தான் அவை!'' எனச்சிலம்புகளை இலக்குவன் எடுத்துக் காட்டினார் இலக்குவன் என்பது வான்மீகர் காட்டும் காட்சி. இலக்குவனை அண்ணன் மனைவியைக் கூட நிமிர்ந்துபார்க்காதவன் எனக் காட்டினார்.

இதைக்கம்பர் சீதாபிராட்டியை நிமிர்ந்து காணாத உத்தமன் குகன் எனக் காட்டினார். அப்படியானால் **தமிழ் ராமாயணத்தில்** இலக்குவனை எப்படிக் கூறியுள்ளார் எனக் கேட்கத் தோன்றுகின்றதல்லவா?

இராமபிரான் முடிசூடி அரசராக விளங்கிய போது உலகத்தவர் சீதாபிராட்டியை ஏதோ அபவாதமாகப் பேசுகிறதையறிந்து, சீதாபிராட்டியைக் காட்டிலே விட்டுவிடுமாறு இலக்குவனை அனுப்பினார். காட்டில் பிராட்டியை இலக்குவன் விட்டுத் திரும்ப முயன்றபோது பிராட்டி கண்ணீர்விட்டு, இலக்குவனிடம் ஒரு செய்தி கூறினாள். ஒரு பெண், தன் பெற்ற தாய் தவிர, வேறு எவரிடமும் கூறமுடியாத ஒரு செய்தியை, தன் கணவனிடம் கூறுவதற்குக் கூட வெட்கப்படவேண்டிய ஒரு செய்தியை, உலகமாதாவான சீதாபிராட்டி இலக்குவனிடம் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

''இளையவனே! நான் நான்கு மாத கர்ப்பவதி. உலகம் ஏதாவது அபவாதம் பேசிவிடும். உன்மனம் என்னைக்கண்டு தவறாக எண்ணாது என அறிந்து கொண்டுள்ளேன். என்னைத் தயவு செய்து ஒரு முறை உற்றுப்பார்'' (நான் என் அண்ணியைக் காட்டில் கொண்டுவிட்டபோதே அவர் கருப்பவதிஎன பிற் காலத்தில் என்மீது அபவாதம் ஏற்படாமல் காப்பாற்ற இதுவழி) எனக்கூறினாள் பிராட்டி.

இளையோனே! இருதுவாய் ஈரிண்டு திங்களுள்
வளையாழி உலகத்தை வாய்மூட வொண்ணாது
விளைவேதாய் முடியுமென அறியேன்.
மேனியினை
உளையாத சிந்தையாய் ! உற்றது நோக்கென
உரைத்தாள்.

இவ்வார்த்தைகளைக் கண்டு வேதனையும் துக்கமும் அடைந்த இலக்குவன் கண்ணீர்விட்டுக் கதறி ''இப்படிப்பட்ட சொற்களைக்கேட்க நான் என்ன குறை செய்தேன்'' என்று மனமுடைந்து சீதாபிராட்டியிடம் பதில்கூறினார்.

என்றினைய அவள்கூற இருகண்கள் நீர்சொரிய
வன்றிறலோன் மனமயங்கிவாய்விட்டுக்
கதறுதலோடு
இன்றிந்த உரைகேட்க என்னகுறை செய்தேனென்று
ஒன்றியவெந்துயர் இளையோன்
உறுதுயராட்சிவையுரைத்தான்.

''அன்னையே! உன்னை எம்பெருமான் திருமணம் புரிந்துகொண்ட தினத்திலிருந்து இன்றுவரை உன்னுடைய திருவடிகளை வணங்கினேன். என் எதிரில் நின்றபோது கூட, உன்னை நிமிர்ந்து பார்த்ததில்லை. இன்று என்னால் உன்னை நிமிர்ந்து பார்க்க இயலுமோ?'' என உரைத்தார்.

**கன்றிய சிந்தையினாய் உன் கணவன்**
**உன்னைக் கைப்பிடித்த**
**அன்றுமுதல் இன்றளவும் உன்னுடைய**
**அடிபணிந்தேன்**
**நின்றபொழுதினும்தூயோய்' நின்மேனி**
**கண்டறியேன்**
**இன்று தானுனைக் காணவல்லனோ**
**என்றுரைத்தான்.**

பிரர்மனைநோக்கப் பேராண்மைபற்றித் திருக்கோவையார் சுருங்கக்கூறியதை மேலும் விவரித்துச்சிறப்பளித்ததாக காட்டுகிறது கம்பரது திருவாக்கு. யாவும் தமிழன்னையின் கருணை!

திருமுறைகளில், பெண்டிரைப்பற்றி வருணனைகள் சில உள்ளன. உதாரணமாக, ஒரு பெண்ணின் கண்களின் அழகைக்கூற இன்னபடி இருக்க வேண்டும்.

**கண்ணிற்கு இயல்பு கசடறக் கிளப்பின்**
**வெண்மை கருமை செம்மை அகலம்**
**நீளம் ஒளியென நிகழ்த்துவர் புலவர்**

என்று இலக்கணம் காட்டும் பட்டினத்தாரின் பதினோராந் திருமுறை - திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில், ''இளம் மானின் அழகுடன், வெள்ளைப் பாலில் நீலமணிக்கிடந்தாற்போல, வெண்மையும் கருமையும் கலந்த நீலமலர்போல் குளிர்ச்சியுடைய தாகி என்போன்ற எளியவர் மயக்கங் கண்டு இரக்கப் படும் திருக்கண்'' என்றார்.

**'நவ்வி மானின் செவ்வித்தாகிப்**
**பாலிற் கிடந்த நீலம் போன்று**
**குண்டுநீர்க்குவளையின் குளிர்ந்து நிறம்பயின்று**
**எம்மனோர்க் கடுத்த வெம்மை நோய்க்கிரங்கி**
**உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்'' என்றார்.**

திருக்கோவையாரில் ''ஈசனிடம் யான் வைத்த அன்புபோல் அகன்று, ஈசனால் நீக்கப்பட்ட எனது பாசம் போல் கறுத்து அவனது தில்லையின் ஒளியை ஒத்து, அவனது தோள்களில் பூசப்பட்ட திருநீறுபோல் வெளுத்து அவனது திருவடிகளைப்பற்றி நான் பேசப்பேச நீண்டு விளங்குகின்ற நீண்டகண்கள்'' என்று தலைவன் தன்மனைவியின் கண்களை வர்ணிப்ப தாகக் கூறினார்.

**ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று. அவன்**
**வாங்கிய என்**
**பாசத்திற் கார் என்று வன்தில்லையின் ஒளிபோன்று.**
**அவன் தோள்**
**பூசத்திருநீறென வெளுத்து ஆங்கவன்**
**பூங்கழல்யாம்**
**பேசத்திருவார்த்தையிற் பெருநீளம்**
**பெருங்கண்களே.**

சீதையின் கண்களின் அழகைப் பேசவந்த சூர்ப்பனகை, தாமரைமாதிரி இருந்தபோதிலும் கடலைப்போல் ஆழமானவை (கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரியகண்கள் என்றாள்.) இராமபிரான் அனுமானிடம் சீதாபிராட்டியின் கண்ணழகைக் கூறும்போது ''தேவியின் கண்களின் பெருமை உணராமல் எவராலும் முடியாது. கருவிழிகள் திருமால் போல் கறுத்திருக்க அவன் படுத்துறங்கும்பாற்கடல்போல் வெள்ளை விழிகள் விளங்கின. எத்தனை முறைகள் பார்த்தாலும் கண்களின் பெருமையை அறியவே முடியாது'' என்றார்.

**பெரியவாய் பரவை ஒவ்வாபிறிதொன்று**
**நினைந்துபேச**
**உரியவராய் ஒருவர் உள்ளத்து ஒடுங்குவதல்ல**
**உண்மை**
**தெரிய நோக்கின் தேவர்க்கும் தேவன் என்னக்**
**கரியவாய் வெளியவாகும் வாள்தடங்கண்**
**அம்மா!**

என்றார்.

பெண்ணின் அழகு பூராவும் கூறவந்தவள் ''அன்னம் இன்னும் அவள்நடையைக் கற்கவில்லை. மான்இவளது அழகிய விழியை இன்னும்பெறவில்லை. கிளி இவளது பேச்சின் அழகை இன்னும் பெற வில்லை.'' என்கிறாள். ஒருதோழி ''கற்றில கண்டு அன்னம் மென்னடை'' என்கிறாள். கம்பன் இதை ''அயோத்தியிலுள்ள பெண்களின் நடைமாதிரி அன்னங்கள்நடைபழகும்'' (சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்காலன்னம்) என்றார். சூர்ப்பனகையை வர்ணிக்கும்போது ''மானின் விழிகொண்டு மயில் வந்தாற் போல் வந்தாள்''(மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்) என்றார். சீதாபிராட்டியின் குரலழகைக்கூற வந்தவர். ''கிளிகளுக்குக்கெல்லாம் அழகாகப் பேச அருளினாள்.'' **(அஞ்சொற்கள் இள்ளைக் கெல்லாம் அருளினாள்)** என்றார்.

திருக்கோவையார் பாடல் பின் வருமாறு:

கற்றில கண்டு அன்னம் மென்னடை
கண்மலர் நோக்கருளைப் பெற்றில
மென்பிணை: பேச்சுப்பெறாக்
கிள்ளை. பிள்ளை இன்று ஒன்றுற்றிலள்:
உற்றதறிந்திலள். ஆகத்
தொளிரும் புற்றில் வாளரவான் புலியூரன்ன
பூங்கொடியே

- திருக்கோவையர் 97.

திருமுறைகளும் கம்பனும் என்ற தலைப்பில் ''மாணிக்கவாசகப் பெருமானது தெய்வீக இலக்கியத்திற்குச் சிறிது அதிகமாகவிளக்கம் கொடுத்தோம் என்றால் அப்பெரியார் அருளிச் செய்துள்ளவை திருவாசகம் திருக்கோவையார் இரண்டு நூல்களான படியால் சிறிது அதிகமாக எழுதினோம். மணிவாசகரின் தமிழ் மணித்தமிழ் அனன்றோ! வாழிய தமிழன்னை. அழுதடியடைந்த அன்பர் அடியவர்க்கு அடிமை செய்வாம்!

யாவற்றுக்கும் மேலாக மணிவாசகப்பெருமானுக்கு ஒரு சிறப்பு உண்டு. இராமாயணம் லவகுசர்கள் சொல்ல இராமன் கேட்டகதை. கந்த புராணம் முருகப்பெருமானால் திருத்தப்பட்ட கதை. மணிவாசகரின் திருவாசகமோ ஒவ்வொரு வரியும் தில்லைநடராஜப்பெருமானால் எழுதப்பட்டு ''அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து'' என எழுதித் தில்லை பஞ்சாட்சரப் படியில் வைக்கப்பட்ட கதை. மணிவாசகப்பெருமானுக்கும் தமிழுக்கும் இதைக் காட்டிலும் என்ன பெருமை வேண்டும்? தமிழன்னையின் பாக்யமே பாக்யம்.

மணிவாசகப் பெருமான் திருவடிகளே சரணம்.

திருச்சிற்றம்பலம்.

★★★

## வாசகர் எண்ணங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமத்துவத்திற்காகப் பாடுபட்ட இராமானுசரைப் பற்றி ஆற்றிய அரிய ஆய்வுரையைப் படித்து அகம் மகிழ்ந்தேன்.

இராமானுசருடைய வாழ்க்கை வரலாற்று நூல்கள் பலவற்றையும் படித்து மிக நுட்பமான செய்திகளையும் திட்பமாக ஆய்வு செய்து அழகுதமிழில் ஆற்றப்பட்ட மாண்புமிகு முதல்வர் தம் உரை தித்திக்கும் தேவாமிர்தமாக இனித்தது. ஓய்வறியா உழைப்பாகவும், முத்தமிழ்ப் பெட்டகமாகவும் விளங்கும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் காலம் சமத்துவம் செழித்தோங்கும் பொற்காலம் என்பது என் எண்ணம். முதல்வரின் தமிழ்ப்பணி ஓங்குக! என உளமாற வாழ்த்துகின்றேன்.

- திருமதி ஜெ. அனுசுயா,
சென்னை - 600 020.

அக்டோபர் திருக்கோயில் இதழுடன் இணைத்து வழங்கப்பட்ட பழநிமுருகன் இராஜ அலங்காரப் படத்தைத் தனியே எடுத்து 'பிரேம்' செய்து வழிபட்டு வருகிறேன். தங்கள் தீபாவளி பரிசு ஆண்டுதோறும் தொடரட்டும்.

- இரா. கணேசன்,
குமாரபாளையம்.

ஐந்து ரூபாய் செலவில் ஒரு அற்புத சமயக் களஞ்சியம். ''திருக்கோயில்'' ஒவ்வொருவரும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம். விரைவில் பல மெய்யன்பர்கள் எங்கள் ஊரில் திருக்கோயில் இதழின் ஆயுள் உறுப்பினராக உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- எம். இராமச்சந்திரன்,
சென்னை - 600 004.

கந்தர் சஷ்டி விழாவைப் பற்றியும், நவராத்திரி விழாவைப் பற்றியும் மிகச் சிறப்பான விவரங்களைப் படித்து மகிழ்ந்தோம். திருக்கோயில் பார்க்கவும், படிக்கவும் பாதுகாக்கவும் உரிய தலைசிறந்த ஆன்மீக இதழ்! ''திருக்கோயில்'' வாழ்க! வளர்க! வெல்க!

- தியாகராஜன்,
மதுராந்தகம்.


★★★






சேலத்தில் அருள்மிகு பிரசன்ன வெங்கடரமண திருக்கோயில் திருமணமண்டபத்தை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் 25.10.98 அன்று திறந்து வைத்தார்கள். சேலம் இணை ஆணையாளர் திரு தி. இராசமாணிக்கம், பி.ஏ.பி.எல். அவர்கள் உடன் உள்ளார்கள்.

 பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 98





சேலம் நேருகலையரங்கில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பில் இலவசத் திருமண விழா 25.10.98 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இலவசத் திருமணங்களை நடத்தி வைத்துச் சிறப்பித் தார்கள். மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இலவசத் திருமண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சேலம் இணை ஆணையாளர் திரு தி. இராசமாணிக்கம் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.